பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 31 சனிக்கிழமை (16.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

# நிலத்திலும் புலத்திலும் திலீபனின் நினைவேந்தல் எழுச்சியுடன் ஆரம்பம்!



(யாழ்ப்பாணம்)

**இந்திய அரசாங்கத்திடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் தாயக மண்ணிலும் புலம்பெயர் தேசங்களிலும் நேற்று மிகவும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகியுள்ளது.**

இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கையை முன்வைத்து திலீபன் நேற்றைய தினம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நாளாகும். இந்த நாளில் அவரது தியாகத்தை நினைவு கூரும் வகையில் தமிழர் தாயகம் எங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இந்த நிலையில் தான் உலக தமிழ் இளைஞர்களுக்கும் அகிம்சை போராட்டத்திற்கும் எடுத்துக்காட்டாகவும் உள்ள திலீபனின் உண்ணாவிரத ஆரம்ப தினமான நேற்று தமிழர் தாயகமெங்கும் நினைவு கூரப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் பிரதானமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் உணர்ச்சி பூர்வமாக நடைபெற்றிருந்தன.

இதில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து 23

## மீண்டும் ஒரு போர் வந்தால் எதிர்கொள்ள இராணுவம் தயார்!

### இராணுவத் தளபதி திடம்



(கொழும்பு)

இலங்கையில் மீண்டுமொரு போர் ஏற்படாத வகையில் முப்படையினரும் சவால்களை சமாளிக்கும் ஆற்றல்களை கொண்டிருப்பதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இராணுவம் 8 ஆவது த- 23

## பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் கல் வீட்டுக்கு மாற்றி விண்ணப்பிக்கலாம்

### யாழ் அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள், கல்வீடு தேவையெனில், மாற்றி விண்ணப்பிக்க முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, யாழ் மாவட்ட மக்களின் வீட்டு தேவை தொடர்பிலேயே மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்துக்கு மேலும் 25 ஆயிரம் வீடுகளுக்கான தேவை உள்ளது. தற்போது ஆயிர 24

## ஓய்வுபெற்ற ஊழியரை மீண்டும் அழைக்கிறது மின்சார சபை

(கொழும்பு)

2014ம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதிக்கு பின்னர், ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்களை பணிக்குத் திரும்புமாறு, அழைப்பு விடுக்கப்பட்டுள் 24

## மகிந்த அணியினர் விரைவில் அரசுடன்

### லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து அமைச்சர்கள் விலகிச் செல்வதாக வெளியாகும் தகவல்களில் உண்மைத்தன்மை இல்லை என்று, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விலகிச் செல்பவர்களின் பதவிகளை வகிப்பத 24

## பரு. - பொன்னாலை வீதி மிக விரைவில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை -பொன்னாலை வீதி மிக விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வலி வடக்கு மற்றும் வலி கிழக்கு பகுதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அப்பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்கள் தமது போக்குவரத்தினை இலகுவில் மேற்கொள்வதற்கு உரிய வீதிகளை மாத்திரமே பயன்படுத்த முடியும்.

அந்த வகையில் பருத்தித்துறையில் இருந்து மயிலிட்டிக்கு 24

## தவறான மருந்தை அருந்திய 4 வயது சிறுமி உயிரிழப்பு

(திருமலை)

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தவறுதலாக வேறொரு நோய்க்கான மருந்து வழங்கப்பட்டதால் அந்த சிறுமி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைபறி 24

## வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எனது தந்தை நியாயம் பெற்றுக் கொடுப்பார்

### சதுரிக்கா சிறிசேன



(கொழும்பு)

தனது தந்தையும், ஜனாதிபதியுமான மைத் 24

## ஐ. நாவில் உரையாற்றுகிறார் ஜனாதிபதி மைத்திரிபால



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 19ஆம் திகதி ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தொடரில் உரையாற்றவுள்ளார். 24

## நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க இரு பிரதான கட்சிகளாலும் முடியாது!

### ஜே.வி.பி. திட்டவட்டம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலையை மேம்படுத்த இதுவரையில் ஆட்சியில் இருந்த இரண்டு பிரதான கட்சிகளுக்கும் முடியுமா என்ற விவாதத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஏனென்றால் அவர்க 23

WIN Repair
ACகளும் சகல விதமான குளிர் சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
(C-9658)
T.P-0779648942

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனை

காணியில் முதலீடு செய்து வருமானத்தை உயர்த்துக. A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகில் உள்ள மட்டுவில் வீதியில் எல்லை வீதிக்கு அருகே 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (383)

**தொடர்பு:-0778730129**

## நோயாளர் பராமரிப்பு சேவை

வயோதிபர்கள், நோயாளர்களை உங்கள் வீட்டிற்கே வந்து பராமரிக்கப்படும். வைத்திய சேவையும் உண்டு. அழையுங்கள்.

(383) **077 873 0129**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### கலைமாணி (பழைய பாடத்திட்டம்)
### கலைமாணித் தேர்வுபகுதி-I-2014 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 25.09.2017 (திங்கட்கிழமை) தொடக்கம் 12.10.2017 (வியாழக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 20.09.2017 (புதன்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### கலைமாணித் தேர்வுபகுதி-II-2014 (வெளிவாரி)

மேற்படி கலைமாணி பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்தும் மற்றும் புதிதாக விண்ணப்பிப்பவர்களிடம் இருந்தும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி-29.09.2017 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் அல்லது www.facebook.com/uoj.codl எனும் முகப்புத்தகப் பக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
15.09.2017

(சி-9654)

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்
### குடியியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 16ன் கீழான அறிவித்தல்

**வழக்கிலக்கம்:-27/2017**
**நம்பிக்கைச் சொத்து**


மேற்படி வழக்கில் மானிப்பாய் வீதி, உடுவிலைச் சேர்ந்த் ஞானகுமாரி சிவநேசன் என்பவரால் யாழ்ப்பாணம், அரசடி வீதி, இலக்கம் 238 எனும் முகவரியில் வதியும் துரைசிங்கம் தட்சணமூர்த்தி என்பவர் உட்பட 16 பேருக்கு எதிராக 'கைதடி வீட்டுத் திட்டச் சங்கம்' எனும் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பில் 13.07.2017 பிராது/மனுத்தாக்கல் செய்து, அன்றைய தினமே அவர்களது சட்டத்தரணிகளால் ஆதரிக்கப்பட்டது. மேற்படி பிராது/மனுவில் எதிராளிகள் கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்ல என்ற கட்டளையும் தீர்ப்பும், எதிராளிகள் கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் ஆதனத்தைக் கையாளும் சட்ட தத்துவம் அற்றவர்கள் என்றும் அச் சங்கத்தின் பெயரில் அவர்கள் ஆற்றிய கருமங்கள் அனைத்தும் வெற்று வறிதானவை என்ற கட்டளையும் தீர்ப்பும், கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்திற்குப் புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 75, 76இன் கீழான கட்டளையும் தீர்ப்பும், எதிராளிகள் கைதடி வீட்டுத் திட்டச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற முகதாவில் 2013ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்ட காலம் முழுவதுமான வரவு-செலவுக் கணக்குகளை மன்றிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டளையும், எதிராளிகள் கைதடி வீட்டுத் திட்டச் சங்கத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் என்ற முகதாவில் அவர்களால் அறவிடப்பட்ட பணம், கொள்முதல் செய்யப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக அசையும், அசையாச் சொத்துக்கள் யாவும் கைதடி வீட்டுத்திட்டச் சங்கம் என்ற நம்பிக்கைப் பொறுப்புச் சொத்துக்கு சொந்தமானவை என்ற கட்டளையும் தீர்ப்பும், எதிராளிகள் வழக்கு நடைபெற்று முடியும் வரை கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பிற்குட்பட்ட ஆதனத்தை எந்த வகையிலும் கையாள்வதை அல்லது பாரதீனப்படுத்துவதை மற்றும் கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் பெயரால் எந்தவொரு காரியத்தையும் ஆற்ற தடை செய்யும் இடைக்காலக் கட்டளை ஆகிய நிவாரணங்களை வழக்காளி கோரியுள்ளார்.

மேற்படி வழக்காளி கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் ஒரு பயனாளி மட்டும். ஆதலால் குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 16இன் கீழ் பயனாளிகள் சார்பில் வழக்குத் தாக்கல் செய்ய அனுமதி கோரி, கௌரவ நீதிமன்றம் 13.07.2017 அன்று அதற்கு அனுமதி வழங்கியுள்ளதோடு இவ்வழக்கோடு சம்பந்தப்பட்ட அனைவரும் அறிவித்தல் பெறும் பொருட்டு பகிரங்க விளம்பரம் ஒன்றை செய்வதற்கும் அனுமதி அளித்திருந்தது. எனவே இவ்வழக்கின் நடவடிக்கைகளில் பங்குபற்ற விரும்புப்பவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான அறிவித்தலாக இவ்விளம்பரத்தை கருதவும். இவ்வழக்கு அடுத்த தவணை 18.09.2017.

**பதிவாளர்**
**சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்.**

(382)

## குரு பட்டாபிஷேக நிறைவு நாள்
# வாழ்த்துக்கள்



**34ம் வருஷ நிறைவு**
சைவ சித்தாந்த பண்டிதர்
சிவாகம உபதேச வாசஸ்பதி
சிவாகம வித்தியாபூசணம்

**சிவஸ்ரீ. தியாக.**
**சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
**B.A.Dip in Edu.M.A பிரதியதிபர்**
**நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் தேவஸ்தானம் (ஆதீன ஹர்த்தா)**

**பொன்விழா வாழ்த்து**
அகில இலங்கை சமாதான நீதவான் (JP)
ஓய்வுபெற்ற அதிபர், சிவாகம சேவாகாலதூதர்
கிரியாகால சேவாதூதர்

**சிவஸ்ரீ கந்த.சோமசுந்தரக்குருக்கள் அவர்கள்**
**(கரவெட்டி தன்லையப் புல வீரபத்திரகாளி கோவில் ஆலய பிரதமகுரு)**



அன்னை அம்பிகைக்கும் ஐங்கரற்கும் ஆறுமுகற்கும்
முன்னை அடிபணிந்து முறைசார் கிரியைகளை - பின்னமிலான்
சோமாஸ்கந்தராஜ குரு தருகின்றான்
மாமாயி மாகாளி துணை
எல்லாமா யொன்றாகி எங்கும் நின்று இருள் கெடுக்கும் பரஞ்சுடராம் ஈசனுக்கு
ஒல்லாதே தீபங்கள் கையிற் கொண்டு ஓங்கார வடிவாகச் சிரசு நெற்றி
நல்லாரம் திகழ் மார்பு நளின பாதம் நவிலுமிந்த அங்கங்கள் நேர்முன்னாகச்
சொல்பொருளாஞ் சுருதி மணியோசையோடும்
சுற்றுகின்ற சோமாஸ்கந்தராஜாக் குரு வாழி! வாழி!!
வளமோடு நாளும் வாழ்த்திட வாழி வள்ளுவர் குறள்வழி நின்றுவாழி
அளப்பெரும் ஆற்றலே பெருகிடவாழி அன்னையின் அருளோடு உயர்வுறவாழி
வள்ளலான் வீரபத்திரன் பத்திரகாளி அருள் வழங்கிட வேண்டினோம் வாழி
தெள் தமிழ் உரைத்த சோமசுந்தரக் குருக்கள் நிதம் நிதம் வாழி

வாழ்த்துவோர்:
அன்புடன் சிவத்திரு தம்பு இராமச்சந்திரன் - தும்பளை
வில்வளை ஶ்ரீ மஹாபிரத்தியங்கிரா காளி அம்மன் தேவஸ்தானம்
தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

(C-9650)



# சிவபெருமானின் அருளின்றி சைவ சமயத்தை யாராலும் நெருங்கக்கூட முடியாது

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**சிவபெருமானின் திருவருளைப் பெற்ற மனிதர்கள் மட்டுமே சைவசமயத்தை அறியவும் பின்பற்றவும் முடியும் எனத் தெரிவித்த இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், மற்றவர்களால் இந்து சமயத்தை நெருங்கக்கூட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.**

சைவபரிபாலன சபை நடத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கைச் சைவ மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இறைவன் ஒருவனே என்ற தெளிவான கோட்பாடுகளை விளக்கமாக எடுத்துக்கூறியது சைவசமயம். சைவ தத்துவங்களும் கடவுள் கொள்கைகளும் மிகவும் நுட்பமானவை. மிக உயர்ந்தவையும் ஆகும். இது இறைவனின் நன்மைகளை தெளிவாக காட்டுவதாக அமைகிறது.

அந்தப் பரம் பொருளான சிவபெருமானே நமக்கு அருள் செய்து சமய உண்மைகளை ஆதி காலத்தில் இருந்தே நமக்கு நேரடியாகவே உணர்த்தியிருப்பதால் சைவசமயம் அநாதியான காலத்தில் இருந்தே இருக்கிறது

சிவபெருமானின் திருவருளால் அவன் அருளைப் பெற்ற மனிதர்கள் மட்டுமே சைவ சமயத்தை அறியவும், பின்பற்றவும் முடியும். மற்றவர்களால் நெருங்கக்கூட முடியாது.

சைவசமய தத்துவங்களை, வேதங்கள் ஆகமங்கள் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திர நூல்கள் போன்றவையும் பதினெண் சித்தர்களும் விளக்குகின்றார்கள். இவை அனைத்தும் படிக்கப் படிக்க சிவானுபவ இன்பம் தந்து நம்மை சிவபெருமானுக்கு அருகில் இட்டுச்செல்பவை.

இவை அனைத்தும் படிக்க ஒரு பிறவி போதாது. இருப்பினும் அவன் அருளால் சிவஞானம் கிட்டி அதுவும் கைகூடும். நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இத்தகைய மேன்மைகளைக் கொண்ட சைவ சமயத்தைப் பற்றியும் அதன் முழுமுதல் கடவுளாகிய சிவபெருமானை பற்றியும், தற்போது ஒரு சிலர் ஆழ்ந்து ஆராயாது சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை தெரிவிப்பதும் நூல்களை வெளியிடுவதும் அவர்களது அறிவீனத்தையே எடுத்தியம்புகிறது.

அன்று அந்நியர் ஆட்சியில் நம் மண்ணில் தமிழும் சைவமும்புதையுண்டுபோகும் நிலையில் தனி ஒருவராக இருந்து தனது ஆன்மபலத்தால் சைவத்தையும் தமிழையும் காத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை.சாதி வெறியர் என சிலர் தாம் பிரபல்யம் அடைவதற்காக தற்போது மீண்டும் கூறத்தொடங்கியுள்ளார்கள். நாவலரைப் பற்றியும் அவரது கருத்துக்களையும் செயல்களையும் ஆழமாக ஆராய்ந்தவர்களுக்குத்தான் தெரியும் ஆறுமுகநாவலரின் சாதிய நிலைப்பாடு.

சிவ நிந்தனை செய்பவர்களையும், ஆலயத் சொத்துக்களை அபகரிப்பவர்களையும் ஏழைகளுக்கு உதவாதவர்களையும் நாவலர் இழிசாதி என குறிப்பிட்டார்.இதற்கு அவரது நூல்களே ஆதாரம்.

இன்றைய எமது சமூக சீர்கேடுகள் எல்லாவற்றையும் களைவதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிந்தனைகளும் பணிகளுமே முன்னுதாரணமாக விளங்குகிறது.

நமது இந்து கலாசார விவகார அமைச்சும், அதன் கீழ் இயங்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பல காத்திரமான பணிகளை இலங்கை இந்து மக்களுக்கு, குறிப்பாக இந்து இள வயதினருக்காக மேற்கொண்டு வருகிறது. இத்தகைய பணிகள் நிலைத்து நீடிக்கக்கூடியதாக அமைவதற்கு இலங்கையிலுள்ள அனைத்து இந்து சைவ மக்களும் இந்து சைவ நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பழைமை வாய்ந்த கோவில்களை புனரமைப்பதற்கும் சைவ பணிகளை முன்னெடுத்து செல்வதற்குமான நிதியை அமைச்சின் ஊடாக ஒதுக்க வேண்டும் என இந்து பரிபாலன சபையினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அமைச்சர் ,கோவில்களை புனரமைப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கியுள்ளேன். மேலும் தேவைப்படும் இடத்து என்னிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்து தெரியப்படுத்தினால் என்னால் உதவ முடியும் எனத் தெரிவித்தார். (இ-9)




இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பிரிவு 1க்கான தொடர்

## நாவாந்துறை சென்.மேரிஸ் - கொழும்பு போக்குவரத்து கழகம் மோதல்





(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பிரிவு-1க்கான (Division -1) தொடரில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்து சபை கழகம் (CTB) மோதவுள்ளது.

இப்போட்டி யாழ்ப்பாணம் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறுகிறது. (க)

# யாழ்.மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைத்தலைமையில் இடம்பெறும். (இ-3)

# தேசோதய சபையின் விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசோதய சபையின் விசேட பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய தலைமையகத்தில் தேசோதய தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் யாழ். மாவட்டத்தில் இதுவரை திறக்கப்படாத தேசோதய காரியாலயங்களை விரைவில் திறப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட உள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள தேசோதய உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தேசோதய தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10)

# யாழ்.மாவட்ட அ/தி குழுக்கூட்டம்

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் இடம்பெறும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (மு-9)

## வல்வையில் 6 பேர் கைது

வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் உடுப்பிட்டி பகுதியில் கஞ்சா பைகளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் அதே பகுதியில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மு-60)


31ம் நாள்

நினைவஞ்சலி



நிஜமாய் 17 - 06 - 1966

நிழலாய் 17 - 08 - 2017

"என்னிடம் நம்பிக்கை கொள்பவரே இறப்பினும் வாழ்வார்"

அமரர் மைக்கல்பிள்ளை

இமானுவல் ராஜ்குமார் (வசந்தன்)

கடந்த 17.08.2017 அன்று டென்மார்க்கில் இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் 31ஆம் நினைவு நாள் இன்றாகும். இன்று காலை 6.15 மணியளவில் கரவெட்டி புனித மரியன்னை ஆலயத்தில் இடம்பெறும் ஆன்ம இளைப்பாற்று பூஜையிலும் பின்னர் மதியம் எமது இல்லத்தில் இடம்பெறும் வழிபாட்டிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தாயார், மனைவி, பிள்ளைகள் (C-9657) கொடிகாமம் வீதி, நெல்லியடி.


## மர்மமான முறையில்

# வெட்டுக்காயத்துக்கு இலக்கான குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வெட்டுக்காயத்துக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 6 நாள் குழந்தையொன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கீரிமலை நல்லிணக்கபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

கழுத்தில் மர்மமான முறையில் வெட்டுக் காயத் துக்கு இலக்காகி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட குழந்தையே உயிரிழந்துள்ளது.

இதில் ரேஸி எலிற்றா (வயது-18) என்பவரது குழந்தையே உயிரிழந்ததாகும்.

இது தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

# தடைகளைக் கடந்து தொடர்ந்து போராடுவோம்

இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட, வேலை நிறுத்தத்தை தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படின், அவை அனைத்தையும் கடந்து தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்க பிரதம செயலாளர் ரஞ்சன் ஜெயலால் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் கடந்த 13ஆம் திகதி ஆரம்பித்த வேலை நிறுத்தம் தொடர்பில் நேற்று முன்தினம் அமைச்சருடன் கலந்துரையாடல ஒன்று இடம்பெற்றது.

எனினும், அது வெற்றியளிக்கவில்லை எனவும் அதனால் நியாயமான தீர்வு கிடைக்கும் வரை இந்த வேலை நிறுத்தத்தை தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாகவும் ரஞ்சன் ஜெயலால் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (மு-11)


## சொர்க்கம் திருமணசேவை

கனடாவில் வசிக்கும் 30 வயதுடைய ரோமன் கத்தோலிக்க மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. USAஇல் வசிக்கும் 32 வயது மணமகனுக்கு படித்த அழகான மணமகளை எதிர்பார்க்கிறோம். கனடாவில் வசிக்கும் 29 வயதுடைய 8இல் செவ்வாய் குற்றம் உள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:-
Tp & Viber 0014166661855 & 0016475043336 (379)



## மரண அறிவித்தல்

திருமதி
**மதனரூபி சசிக்குமார்**



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிக்குமார் மதனரூபி கடந்த 13.09.2017 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தயானந்தம் - பரமேஸ்வரியின் அன்பு மகளும் முருகானந்தம் - இன்பராணியின் அன்பு மருமகளும் சசிக்குமாரின் அன்பு மனைவியும் ருக்சிகன், பிரவீணா, டென்சிகாவின் அன்புத் தாயாரும் மதனா, மயூரன், மகிந்தன், மயூரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயக்குமார், சித்ரா, அமுதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் டெனிக்ஷனின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை (18.09.2017) இத்தாலியில் (பலர்மோவில்) நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:-
குடும்பத்தினர்

(384)

# மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!







இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து முப்பது வருடங்களுக்கு முன்னர் தியாக தீபம் திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த நாளான நேற்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்த இந் நினைவேந்தல் நிகழ்வில் பொதுமக்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பெற்றோர்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். தியாக தீபத்தின் நினைவு தூபி இலங்கை இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள இடத்திலேயே நினைவஞ்சலிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: உ.சாளின்)

## ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் விழாவும்

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் 196 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் வழிபாடும் எதிர்வரும்செவ்வாய்க்கிழமை (19.09.2017) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

கட்டைவேலி பருத்தித்துறை சேகர முகாமைக்குரு டேவிட் அழகராசா தலைமையில் நடைபெறும் வழிபாட்டில் அனைத்து சேகர சபை மக்களும் கலந்து கொண்டு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-60)

## நற்கருணைப் பெருவிழாவும் திருவிழாத் திருப்பலியும்

யாழ்.அஞ்சனந்தாழ்வு தூய ஆரோக்கிய அன்னை ஆலய யூபிலித்திருவிழா கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவ நாட்கள் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப்பெருவிழாவும் நாளை காலை 6.30 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-7-105)

## அரசியல்-அறிவியல்-சமூகம் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று

ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கத்தின் அரசியல்- அறிவியல் - சமூகம் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இராமநாதன் வீதி ராஜா கிறீம் கவுஸ் ஹம்சியா மஹாலில் ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான நா.சத்தியநாதன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் வாழ்த்துரையை வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் ஓய்வுநிலைஅதிபர்க.அருந்தவபாலனும் வழங்குவர். வெளியீட்டுரையை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான கே.ஆர். டேவிட் வழங்குவார். கருத்துரையை சமூக ஆய்வாளரும் எழுத்தாளருமான பெ.முத்துலிங்கம் வழங்குவார். மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக அரச அறிவியல்துறை தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் வழங்குவார். இந் நூலின் முதற் பிரதியை தினக்குரல் ஸ்தாபகரும் தொழிலதிபருமான எஸ்.பி.சாமி பெற்றுக் கொள்வார். (இ-7)

## ‘ஜனாதிபதி அப்பா’ நூல் வெளியீட்டு விழா





(கொழும்பு)

இலங்கை அரசியல் வரலாற்றில் புது வரலாற்றை உருவாக்கிய மிகவும் எளிமையான விவசாய குடும்பத்தில் பிறந்த ஒரு மனிதர் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட அழகிய கதையை அவரது மகளின் பார்வையில் கூறும் "ஜனாதிபதி அப்பா" நூல் வெளியீட்டு விழா நேற்று முற்பகல்கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

தனது தந்தையார் பிரதேச அரசியல்வாதியாக அரசியல் வாழ்வை ஆரம்பித்து, ஜனாதிபதி பதவி வரையான முன்னேற்ற பயணத்தை மேற்கொண்டபோது அவரது மூத்த மகளான சத்துரிக்கா சிறிசேன பெற்ற அனுபவங்களைப்பற்றி இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. ஜனாதிபதி பதவி வகிக்கும் தனது தந்தை தொடர்பில் மகளால் எழுதப்பட்ட முதலாவது வாழ்க்கைச் சரிதமாக இந்த நூல் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. (இ-7)

## அபான்ஸ் காட்சியறையை உடைத்து மடிக் கணனி, 16 தொலைபேசிகள் திருட்டு

பருத்தித்துறையிலுள்ள எல்.ஜி.அபான்ஸ் காட்சியறையில் 16 கைத்தொலைபேசிகளும், மடிக் கணனி ஒன்றும், ஒரு இலட்சம் ரூபாய் பணமும் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. கடந்த புதன் கிழமை (13.09.2017) இரவு பூட்டி விட்டுச் சென்ற மேற்படி காட்சியறையினை மறுநாளான நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை (14.09.2017) காலை திறக்க வந்த போது திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிட்ட போதும் திருடப்பட்ட பொருட்கள் தொடர்பான விபரங்கள் உடனடியாக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலையில் திருட்டுப் போன பொருட்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இ-60)

## இராசி பலன்

16.09.2017
(ஆவணி 31, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 4.56 மணிவரை
பூசம் பின்னிரவு 2.13 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
திருநீலகண்டர் குருபூசை,
ஏகாதசி விரதம்
வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம், பூராடம் | | ராகு, சந் |
| கேது | | | சூரி செவ் புத சுக் |
| | சனி | குரு | |

**மேடம்:** பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**இடபம்:** உடல்நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள்.

**மிதுனம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணமொன்று ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**கன்னி:** செல்வ நிலை உயரும் நாள், யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், போசன நன்மையுண்டு.

**துலாம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

**மகரம்:** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், தொழில் மேன்மையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்கள் இன்று தானாகவே நடை பெறலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

# சுதந்திர தமிழீழம் மலரட்டும்!







இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தியாக தீபம் திலீபன் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நாள் நேற்றாகும். இந்த நாளில் திலீபனின் தியாகத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நினைவுகூர்ந்தனர்.

நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது மாணவர்கள் திலீபனது உருவப்படத்திற்கு மலர் தூபி அஞ்சலி செலுத்தினர். யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவ, மாணவிகள் மற்றும் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். நேற்றுக்காலை ஆரம்பித்த இந்த அஞ்சலி நிகழ்வுகள் தொடர்ந்து எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் காலை 8 மணிமுதல் 10 மணிவரை நடைபெறும் என மாணவர் ஒன்றிய தலைவர் அறிவித்துள்ளார்.

தியாக தீபம் திலீபனின் பாடல்கள் இசைக்கப்பட்டு உணர்வு பூர்வ மாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. எனினும் பல்கலை க்கழக வாயில்களில் வழமைபோன்று புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த னர். (படங்கள்:-உ.சாளின்)

## பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக தேவஞானன் பதவியுயர்வு



யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஞானானந்தராஜா தேவஞானன் கடந்த 15.05.2017 ஆம் திகதி தொடக்கம் இலங்கை கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக (இலங்கை கணக்காய்வுச் சேவை-தரம்-I) பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் கணக்காய்வு முகாமைத்துவப் பொறுப்புக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

36 வருடங்கள் தொடர்ச்சியான கணக்காய்வு சேவையினை மேற்கொண்டு வந்திருந்த இவர் நாட்டின் பல பாகங்களிலும் கணக்காய்வு அத்தியட்சகர், உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி போன்ற முக்கிய பதவிகளை வகித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண பொது கணக்கு குழு மற்றும் பாராளுமன்ற பொதுக்கணக்குக் குழு பொது முயற்சிகள் கணக்கு குழு (கோப்) ஆகியவற்றில் பங்கு கொண்டு அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்களில் காணப்பட்ட நிதி நிர்வாகச் செயற்பாடுகளின் குறைபாடுகளை சிறந்த முறையில் விசாரணை செய்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் இவரது வகிபாகம் குறிப்பிடத்தக்கதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் 15 வருடங்களுக்குப் பின்பு இப் பதவிக்கு நியமனம் பெற்ற ஒரே ஒரு தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆட்சி இரண்டு வாரங்களில் மாறும்
## ஊவா மாகாண சபையில் பெரும் அமளி துமளி

ஊவா மாகாண சபையின் ஆட்சி, இரு வாரங்களுக்குள் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கூறியதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து, சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

ஊவா மாகாண சபை அமர்வு, நேற்று முன்தினம் சபைத் தலைவர் ஏ.எம். புத்ததாச தலைமையில், சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

சபை அமர்வு ஆரம்பமானதும், சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க, ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது, ஊவா மாகாண சபையின் ஆட்சியை, மாற்றியமைத்து ஐக்கிய தேசியக் கட்சி மயப்படுத்த, இரு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதாக, ஊடகங்களில் செய்தி வெளியாகியது.

இது விடயமாக, ஊவா மாகாண சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது. சபையின் எதிர்க்கட்சித் தலைவர் இச்சபையில் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று, சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதையடுத்து, சபையின் எதிர்க்கட்சித்தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க உரையாற்றுகையில்,

"ஊடகவியலாளர் சந்திப்பின் போது, என்னால் கூறப்பட்டதாகக் கூறப்பட்டு, வெளியான செய்தி தொடர்பாக எவருக்கும் மனத்தாக்கங்கள் மற்றும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்குமானால், அதையிட்டு மனம் வருந்துகின்றேன். அத்துடன், இச்சபையில் 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் தோல்வியுற்றமைக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எமது முதலமைச்சருக்கு தொலைபேசி ஊடாக வாழ்த்துக்கூறியதை, சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். மேலும், ஊடகங்களில் தற்போது வெளிவரும் செய்திகள் குறித்து அலட்டிக் கொள்ள வேண்டாம்" என்றார்.

இதற்கு பதிலளித்த மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க,

"எமது சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க, மாகாண முதலமைச்சராக வரவேண்டுமானால், ஜனாதிபதியின் அனுமதியுடன் வரவேண்டும். அப்படி வந்தால், எனது முதலமைச்சர் பதவியை நானாகவே வழங்குவேன். அதைவிட்டு பின் கதவுகளால் அவர் முதலமைச்சராவதற்கு வாய்ப்புகள் இல்லை. மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நான் தொலைபேசியில் கதைத்ததாக, எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். என்னுடன் யார் தொலைபேசியில் பேசினாலும், நான் பேசுவேன். முன்னாள் ஜனாதிபதி தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட மூலம் தோல்விக்கு வாழ்த்து கூறினார்.

இந்தச் சட்டமூலத்தில் சில தவறுகள் இருக்கவே செய்கின்றன. அத்தவறுகள் திருத்தப்பட்டு, மீளவும் சபையில் சமர்ப்பிக்கப்படும்போது, அதனை எமது சபையும் அங்கீகரிக்கும். இது விடயமாக ஜனாதிபதியிடமும் தெளிவாகக் கூறியுள்ளோம்" என்றார்.

சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க, ஊடகவியலாளர் சந்திப்பின் போது கூறிய கூற்றுகள் தப்பானதென்று, பலரும் கருத்துத் தெரிவித்ததையடுத்து, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையில் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டு, சபை அமர்வு அமளி துமளியாகியது. பின்னர் சபை அமைதிக்குக் கொண்டு வரப்பட்டது. (இ-7)

## வெலேசுதா வழக்கு; சாட்சியப் பதிவுக்கு மன்று திகதி குறிப்பு

(கொழும்பு)

மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள, வெலேசுதா என்றழைக்கப்படும் கம்பொல விதானகே சமன் குமார, அவருடைய மனைவி, அவருடைய தங்கை ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள பணச்சலவை வழக்கின் சாட்சியப்பதிவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் திகதி குறித்தது.

மேற்குறிப்பிட்ட மூவரும் 140 மில்லியன் ரூபாய் கறுப்புப் பணத்தை பணச்சலவை செய்தனர் என்று சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பணச்சலவைத் தடுப்புச்சட்டத்தின் கீழ், இவர்களுக்கு எதிராக 57 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சாட்சியப் பதிவுக்கான தினங்களாக டிசெம்பர் 14, 15ஆம் திகதிகளைக் குறித்தார். (இ-7)

## இது ஒரு குற்றமா? புலம்புகிறார் மகிந்த

அரசியல் அமைப்பில் உள்ள பௌத்த மதத்தைப் பாதுகாத்தல், அதனைப் போஷித்தல் என்ற உறுப்புரையின் படி அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்ற நாட்டின் தலைவரினால் வழங்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தப் போனதனாலேயே லலித் வீரதுங்கவும் அனுஷ பெல்பிட்டவும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு ஏன் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான காரணத்தை விளக்கி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். லலித் வீரதுங்க சிறை சென்ற பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து நான்காவது முறையாக அரசை விமர்சித்துள்ளார். (இ-7)





மக்கள் குடியிருப்புக்கு மத்தியிலுள்ள மயானங்களை அகற்றி மக்கள் வாழ்விடச் சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து நேற்று சமூக வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

# இன விடுதலை வேண்டி தியாக பயணம்

காலை ஒன்பது மணியிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து திலீபனை சந்தித்து விடை பெறுகிறார்கள். எல்லோருடனும் அவர் அன்பாக பேசுகிறார். வோக்கிடோக்கியில் தலைவருடன் சில நிமிடங்கள் பேசுகிறார். பேசிவிட்டு மிக மிடுக்காக நடந்து முன் ஆசனத்தில் போய் ஏறினார்.

வாகனம் நல்லூர் கந்தசுவாமி கோவிலை நோக்கி ஓடுகிறது. பாதையின் இரு பக்கத்திலும் மாணவர்களும், பொதுமக்களும் கையசைத்து வழியனுப்புகிறார்கள். நல்லூர் கந்தசுவாமி கோவிலை சென்றடைந்தது. வாகனம் நின்றது. திலீபன் உண்ணாவிரத மேடை நோக்கிச் செல்கிறார்.



தமிழீழ தாயின் எதிர்பாராத ஆசியினை பெறுகின்றார்

எதிர்பாராத விதமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. வயதான ஓர் அம்மா. கண்களில் கண்ணீர் மல்க திலீபனை மறித்து தன் கையில் சுமந்து வந்த அர்ச்சனை சரையில் இருந்து திருநீற்றை எடுத்து திலீபனின் நெற்றியில் வீரத்திலகமிடுகிறார். தாயற்ற திலீபன் அந்த தாயின் பாச உணர்வில் மூழ்கிப்போனார்.

## வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபன்

பிற்பகல் 2.00 மணி இருக்கும் திலீபன் கம்பீரமாக வீற்றிருந்தார். இரண்டாவது மேடையிலே நடைபெற்றுக்கொண்டிருந்த உண்ணாவிரத விளக்கக் கூட்டம் முடிவடைந்து விட்டது. படிப்பதற்கு புத்தகம் வேண்டும் என்றார் திலீபன்.

15 நிமிடங்களில் பல அரிய நூல்கள் மேடைக்கு வந்தன. பாலஸ்தீன கவிதை என்ற நூலை கொடுத்த போது அதை மிகவும் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினார். மாலை ஐந்து மணிக்கு பக்கத்து மேடையில் மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று. பாடசாலை மாணவிகள் போட்டி போட்டுக்கொண்டு கவிதைகளை வாசிக்கத் தொடங்கினர். சுசிலா என்ற மாணவி மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தனது கவிதையை வாசித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு கட்டத்தில் அவர் அழுதே விட்டார். "அண்ணா திலீபா இளம் வயதில் உண்ணாமல் தமிழினத்திற்காக நீ தவமிருக்கும் கோலத்தைக் காணும் தாய்க்குலத்தின் கண்களில் வடிவது செந்நீர்." சுசிலாவின் விம்மல் திலீபனின் கவனத்தை திருப்பியது. கவிதைத் தொகுப்பை மூடி வைத்து விட்டு கவிதை மழையில் நனையத் தொடங்கினார்.

இறைவா திலீபனை காப்பாற்றிவிடு. கூடியிருந்த மக்கள் நல்லூர் கந்தனிடம் அடிக்கடி இப்படி வேண்டிக்கொள்கிறார்கள்.



தமிழீழ தேசிய தலைவர் திலீபனை பார்க்க வருகின்றார்

அன்று இரவு 11.00 மணியளவில் தலைவர் பிரபாகரன் திலீபனை பார்ப்பதற்காக மேடைக்கு வருகிறார். அவருடன் சொர்ணம், இம்ரான், அஜித், சங்கர், ஜொனி இப்படி பலரும் வருகின்றனர். வெகு நேரம் வரை தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திலீபன். யாரையும் அதிக நேரம்பேச அனுமதிக்க வேண்டாம் என்று போகும் போது கூறிவிட்டுச்சென்றார் தலைவர். நீர், உணவு உட்கொள்ளாத ஒருவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால் விரைவில் களைப்படைந்து விடுவார். இதனால்தான் தலைவர் அப்படிக் கூறிவிட்டுச் சென்றார்.

## பத்திரிகையாளர் வருகை

அன்றிரவு பத்திரிகை நிருபர்களும் பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களும் திலீபனை பார்க்க மேடைக்கு வந்திருந்தனர். அவர்களுடன் திலீபன் மனம் திறந்து பேசினார். நள்ளிரவு 12.00 மணியளவில் படுக்கைக்குச் சென்றார்.

தியாக தீபத்தின் உண்ணாவிரதப் போராட்டத்தின் முதல்நாள் முடிவு பெற்றது.

(தியாக வேள்வி தொடரும்...)


இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

# விலை மனுக்கோரல்

## இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளின் விற்பனை

### கேள்வி இல.2017/NP/10

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளை விற்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பங்களை செயற்பாட்டு முகாமையாளர் (வட மாகாணம்), இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இடமிருந்து மீளளிக்கப்படாத தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 10,000/-+ வரிகள் (VAT + NBT) இனையும், மீளளிக்கப்படும் தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 250,000/- இனையும் வைப்புச் செய்ததன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும். (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

விலை கோருபவர்கள் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளை வைப்பிலிடும் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வியாபார நிறுவனமெனின் – வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி/ கூட்டிணைவுச் சான்றிதழின் பிரதி

தனிப்பட்ட நபரெனின் – தேசிய அடையாள அட்டையின் பிரதி / சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் கிளைகளில் தங்க நகைப் பொதிகளை பரிசீலிக்க முடியும்.

| இடம் மற்றும் முகவரி | பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் |
|---|---|
| இலங்கை வங்கி<br>1. முல்லைத்தீவு கிளை<br>2. முள்ளியவளை கிளை<br>3. பரந்தன் கிளை<br>4. கரணவாய் கிளை<br>5. பூவரசங்குளம் கிளை<br>6. திருமுறிகண்டி கிளை<br>7. யாழ்ப்பாணம் இரண்டாம் மேற்தரக் கிளை | திகதி : 24.09.2017<br>நேரம்: மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை<br>பரிசீலனை நேரத்தினை விண்ணப்பதாரர்கள் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக முற்பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br>பெயர்: திரு.க.சுகாதேவன்<br>தொலைபேசி இல: 021 222 4683, 077 512 1983 |

கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 28.09.2017 பி.ப.3.00 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 29.09.2017 மு.ப. 10.00 வரை

- ✓ விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட தங்க நகை பொதிகளுக்கு விலை கோர முடியும். அதே சமயம் அவ்விலை கோரல்கள் யாவும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டு ஒரே கடித உறையினுள் இடப்படலாம்.
- ✓ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம், விடயம் மற்றும் திறக்கப்படும் திகதி ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.
- ✓ முத்திரையிடப்பட்ட விலை கூறல்களை 29.09.2017 (கேள்வி முடிவுத் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்), இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். காலதாமதமாகிய விலை கூறல்கள் யாவும் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாது விலை கூறியோரிற்கு மீள அனுப்பப்படும். காலதாமதமான விலை கூறல்கள் தொடர்பாக தபாலில் இட்டமைக்கான சான்றுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ✓ விலை கூறல்கள் ஏற்கப்படும் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விலை கோரியவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விலை கூறிய ஒருவருக்கு ஒரு பிரதிநிதி) கேள்விகள் திறப்பின் போது சமுகமளிக்கலாம்.
- ✓ தெரிவு சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர்களுக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளரினால் அறியத்தரப்படும்.
- ✓ தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர், தெரிவு செய்யப்பட்டமை அறியத்தரப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்களினுள் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். முழுத்தொகையை செலுத்திய நாளிலிருந்து, 7 நாட்களினுள் சம்பந்தப்பட்ட கிளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விலை கூறியவரிற்கு தங்க நகைப் பொதி கையளிக்கப்படும்.

எக் காரணமும் குறிப்பிடாது விலை கூறல் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர், (வட. மாகாணம).இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

திகதி: 16.09.2017

தொலைபேசி இல: 021 222 3985

(சி-9622)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம் செவ் 12இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: வைத்தியர்
தொ.இ: B/7724

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/7725

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 6
உயரம்: 157cm
தகைமை/தொழில் சிவில் பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/7729

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 30செவ் 12 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:A/L/சவிற்சலாந்து
தொ.இ: B/7731

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம் செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்O/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/7716

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 48செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HND in Engish/ஆசிரியர்
தொ.இ: G/7719

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BFA அரசதொழில்
தொ.இ: G/7720

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்
தொ.இ: G/7722

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 200 அறவிடப்படும்.

## 205 ஆவது நாளில்

# அரசியல்வாதிகள், இராணுவ பொறுப்பதிகாரிகளை அழைத்துச் சந்திப்பொன்றை நடத்தவுள்ளோம்

## கேப்பாபிலவு மக்கள் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி கடந்த இருநூறு நாட்களுக்கு மேலாக போராடி வரும் மக்கள் 205 ஆவது நாளில் இராணுவ அதரிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் எட்டுத்தலைமுறைகளாக தாங்கள் வாழ்ந்த நிலங்களை படையினர் தொடர்ந்தும் தம்வசம் வைதத்துள்ளதனால் தாங்கள் தற்காலிகமாக குடியேற்றப்பட்ட கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதுடன், தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவித்துள்ளதுடன், தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த 200 நாட்களுக்கு மேலாக போராடி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ள போதும், அதற்கான காலத்தை இழுத்தடித்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



முல்லைத்தீவு கேப்பாபிலவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு 148 மில்லியன் ரூபா நிதியை அரசு வழங்கியுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு இவ்வார முற்பகுதியில் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருந்தது.

அவ்வறிக்கையின் படி பாதுகாப்புப் படையினர் வசமிருந்த கேப்பாபிலவுப் பகுதியில் 243 ஏக்கர் காணி எந்தவித நிதியும் கோரப்படாமல் அதன் உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி 5 மில்லியன் ரூபா நிதி அரசால் வழங்கப்பட்ட நிலையில் 189 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய இராணுவ முகாமாக காணப்படும் கேப்பாபிலவு இராணுவ முகாம் வேறு இடத்திற்கு மாற்றி 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு 148 மில்லியன் ரூபா நிதியை பாதுகாப்புத் தரப்பு கோரிய நிலையில் அந்த நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் காணிகளை விடுவிப்பதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் நேற்றுடன் 200 நாட்களைக் கடந்த நிலையில் தங்களுக்கு பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. இதனால் எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ள கேப்பாபிலவு மக்கள் இந்த போராட்டத்தின் 200 ஆவது நாளான நேற்றைய தினம் கேப்பாபிலவு இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோரை அழைத்து சந்திப்பொன்றை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் மேற்படி சந்திப்பு எதிர்வரும் 205 ஆவது நாளில் மேற்கொள்ளவுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு... முல்லைத்தீவு புத்துவெட்டுவான் துணுக்காய் பிரதான வீதி மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு ஏ-9 வீதி கொக்காவில் சந்தியிலிருந்து மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியின் துணுக்காய் கொக்காவில் சந்தி வரைக்குமான சுமார் 20 கிலோ மீற்றர் வீதியானது மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதனால் இதனைப்பயன்படுத்தும் மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியின் 10 கிலோ மீற்றர் வரையான பகுதி கடந்த 2013 ஆம் ஆண்டு பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டபோதும் இப்பகுதிகளில் தினமும் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் காரணமாக குறித்த பகுதியும் சேதமடைந்து போது மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு குறித்த வீதி காணப்படுவதனால் தேறாங்கண்டல், ஐயன்கன்குளம், மருதன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறித்த கிராமங்களில் அடிப்படை வசதிகள் இன்றியும் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிமாவட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் வீதியும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து மழைகாலத்திற்கு முன்னர் செப்பனிட்டுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (2-315)




# வவு/ தமிழ் மத்திய ம.வித்தியில் இன்று சிரமதானப் பணி

(மல்லாவி)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வவு/ தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு பாடசாலையின் சிரமதானப் பணிகளில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரைக் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு பாடசாலை அதிபர் த. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்,

இந்த சிரமதானப் பணி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து முற்பகல் 11 மணி வரை நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் தெரிவிக்கையில்,

பாடசாலை வளாகத்திற்குள்ளும் மற்றும் மாணவர்கள் நடமாடும் பகுதிகளிலும் புற்கள், பார்த்தீனியச் செடிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இதனை அகற்றி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் பாடசாலையை அழகுபடுத்துவதற்காகவும் சிரமதானப் பணி நடைபெறவுள்ளது.

எனவே அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பை வழங்குவதுடன்,

சிரமதான வேலைக்குரிய உபகரணங்களான கத்தி, மண்வெட்டி, புல்லுவெட்டி, போன்றவற்றை தம்முடன் எடுத்து வருமாறும் அவர் கேட்டுள்ளார். (2-15)

# பயிர்ச்செய்கையை பாதுகாக்க யானைவேலியை அமையுங்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் யானைகளில் இருந்து தங்களது வாழ்வாதாரப் பயிர்ச்செய்கைகளை பாதுகாப்பதற்கு யானைவேலிகளை மிக விரைவாக அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகள் உள்ள மக்கள் அன்றாடம் காட்டு யானைகளின் தொல்லையை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இப்பகுதியில் செய்கை பண்ணப்படுகின்ற விவசாயச் செய்கைகளையும் ஏனைய பயிர்ச் செய்கைகளையும் காட்டு யானைகள் அழித்து வருகின்றன.

இப்பகுதியிலுள்ள அதிகரித்துக் காணப்படுகின்ற காட்டுயானைகளை கட்டுப்படுத்துவதற்கென உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல தடவைகள் கோரிக்கை விடுத்த நிலையில் தற்போது இந்தக் கிராமங்களைச் சுற்றி யானை வேலிகள் அமைக்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு முன்னெடுக் கப்பட்டு வருகின்ற வேலி யமைக்கும் பணியை துரிதப் படுத்தி வேலிகளை அமைத்துத்தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)



மு/விநாயகபுரம் அ.த.க. பாடசாலையின் வரலாற்றை கூறும் "மருதமௌலி" நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி.இ. கலைவாணி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், சு.பசுபதிப்பிள்ளை ஆகியோரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் துணுக்காய் உதவி வலயக்கல்விப்பணிப்பாளர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)



விடுதலைப்புலிகளின் அகிம்சை போராளி தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள் , பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு மலர் தூவி வணக்கம் செலுத்தினர். மேற்படி நிகழ்வு கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திலகநாதன் இந்துஜன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள் - பனிக்கன் குளம் செய்தியாளர்)

# மாங்குளம்-வெள்ளாங்குளம் பிரதான வீதியில் கால்நடைகளின் நடமாட்டத்தால் விபத்துக்கள்

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



முல்லைத்தீவு மாங்குளம் வெள்ளாங்குளம் பிரதான வீதியில் இரவு பகல் வேளைகளில் கால்நடைகளின் நடமாட்டத்தால் வாகன சாரதிகள், பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றது.

முல்லைத்தீவு மாங்குளம் ஏ-9 வீதியில் இருந்து துணுக்காய் ஊடாக வெள்ளாங்குளம் வரை செல்லும் பிரதான வீதியில் தினமும் இரவு பகல் வேளைகளில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதனால் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது மாங்குளம் வன்னிவிளாங்குளம், மல்லாவி, துணுக்காய், கல்விளான் சேவா லங்கா கிராமம், வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலிகளாக விடப்பட்டுள்ள கால்நடைகள் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் வீதிகளில் காணப்படுகின்றன.

இவ்வாறு வீதியில் கட்டாக் காலிக் கால்நடைகள் காணப்படுவதுடன் வீதியால் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதுடன் விபத்துக்களால் பெருமளவானோர் காயமடைவதுடன் உயிரிழப்புக்கள் கூட இடம் பெற்றுள்ளன.

எனவே இவ்வாறு கட்டாக் காலிகளாக வீதியில் காணப்படும் கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# வீட்டுக் கடன் திட்டத்தில் பெற்ற பணத்தை அரசு இரத்துச்செய்ய வேண்டும்

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவிப்பு



(கண்டாவளை)

வீட்டுக்கடன் திட்டத்தில் வீடுகளை வழங்கியதால் வீடுகட்டவும் முடியாமல் கடன்கட்டவும் முடியாமல் துன்பப்படுவதாக கிளிநொச்சி யூனியன்குளம் பகுதியில் தேசிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீட்டுக்கடன்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யத்தத்தின் பின்னரான மீள் குடியமர்வையடுத்து கடந்த 2011 ஆம் ஆண்டு கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காணிகளின்றி அன்றாடம் கூலிவேலை செய்து மிகக் கஷ்டமான சூழலில் வாழ்ந்த 23 குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுக்கடன்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டன.

இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீட்டுக் கடன் வழங்கப்பட்ட நிலையில் குறித்த வீடுகளை அமைக்க முடியாமலும் இப்போது கடன்களை கட்டமுடியாமலும் இம் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதில் பெருமளவான குடும்பங்கள் இங்கிருந்து வெளியேறியுள்ளதால் பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுகின்றன.

அதாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்த தங்களைப் போன்றவர்களுக்கு பல்வேறு திட்டங்களூடாக இலவசமாக வீட்டுத் திட்டங்கள், காணிகள் என்பன வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் எங்களை ஏமாற்றி இந்த வீட்டுத்திட்டங்களை தந்திருக்கின்றார்கள்.

இதில் நாங்கள் ஏமாந்து விட்டோம். ஆகவே இந்த நல்லாட்சி அரசாங்கம் இந்தக்கடன்களை இரத்துச்செய்து எங்களது வீடுகளது கட்டிமுடிப்பதற்கு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)




# மந்துவில் குண்டு வீச்சுத் தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளுக்கு மக்கள் அஞ்சலி

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 1999.09.15 இல் இலங்கை விமானப்படை கிபிர் விமானங்கள் நடத்திய குண்டு தாக்குதலில் பலியான 24 பொது மக்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று மந்துவில் பகுதியில் சிறப்புற அனுஷ்டிக்கப் பட்டது.

கடந்த 1999.09.15 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் நடத்திய குண்டுதாக்குதலில் சிறுவர்கள் பெண்கள் உட்பட 24 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம்ந்துவில் பகுதி யில் உறவினர்கள், பொது மக்கள் ஒன்று திரண்டு சிறப்புற அனுஷ்டித்தனர்.

வன்னிக்குரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் உயிரிழந்த உறவுகளின் உறவினர்கள்,பொதுமக்கள்,நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு காவு கொண்ட தமது உறவுகளுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (2-281)

# சர்வதேச நீதி விசாரணையில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உறுதி

இரட்டை வேடம்போடும் நல்லாட்சி அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என தெரிவிக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச நீதி விசாரணையிலே தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகளின் தொடர் போராட்டங்கள் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இடம் பெற்று வருகின்றது.

இந் நிலையில் கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன், 208 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது.

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம், நேற்றுடன் 192ஆவது நாளை எட்டியுள்ளது. இந்த நிலையில் தமது போராட்டம் தீர்வின்றிய நிலையில் தொடர்வதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 204 ஆவது நாளாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் மருதங்கேணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் நேற்றுடன் 185 ஆவது நாளை எட்டியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த கைதுசெய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)



முல்லைத்தீவு மாவட்டத்தில் மந்துவில் பகுதியில் கடந்த 1999.09.15 அன்று இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் உயிர்நீத்த 24 பொது மக்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று மந்துவில் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது மக்கள் ஒன்றுதிரண்டு அஞ்சலி செலுத்தினர். (படங்கள் - பனிக்கன் குளம் செய்தியாளர்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–129

## வீட்டுத்தோட்டமும் டெங்கு நுளம்பு கட்டுப்பாடும்!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இன்றைய தலைப்பு இரண்டு முக்கிய விடயங்களில் கரிசனை செலுத்த முனைகின்றது. ஒரு பக்கம் வீட்டுத்தோட்டத்தை நாம் ஊக்குவிக்கும் போது மறுபக்கம் வீட்டுத்தோட்டத்தில் தாவரங்களை வளர்க்க பயன்படுத்தும் கொள்கலன்களில் தண்ணீர் தேங்கி நின்று நுளம்பின் வாழிடமாக மாறுகின்றதனை சுகாதார பரிசோதகர்கள் அவதானித்து அது பற்றிய தெளிவை மக்களுக்கு ஏற்படுத்த எடுத்த முயற்சியின் பயனாக இக்கட்டுரை உருப்பெறுகின்றது. நிலம் காய்ந்து வரண்டிருந்த காலம் மாறி மழைகாலம் ஆரம்பித்ததற்கான சகுனமாக ஆரம்ப மழை ஆங்காங்கே பார்த்துப் பார்த்து பெய்திருக்கின்றது. யாழ்ப்பாண

கள், தகர டப்பாக்கள், பாவித்த வாகன ரயர்கள், பயன்படுத்தப்பட்ட வெடி பொருட்களினை பாதுகாப்பாக வைத்திருந்த கொள் கலன்கள் இன்னும் பலவற்றை மக்கள்




என்பது ஆட்கொல்லி நோய்: அதனால் வயது வேறுபாடின்றி பால் வேறுபாடின்றி அனைவரும் பாதிக்கப்படுவர் என்பதோடு நாம் கவனயீனமாக இருந்தால் இந்த


லனிலிருந்து வெறியேற்ற வேண்டும். பின்னர் அந்த கொள்கலனிலுள்ள தாவரத் தையும் மண்ணையும் வெளியே எடுத்து விட்டு மணல்மண் கலந்து மீண்டும் கொள்கலனை நிரப்பு தல் வேண்டும். நீர் பிடித்து நிற்ப தற்காக தேங்காய் நார் எடுத்த பின்னர் கழிவாக வரும் சோத் தியை காளான்பூஞ்சணம்கொண்டு உக்க வைத்து பயன்படுத்தலாம். காளான் பூஞ்சணத்தை பயன்படுத்தி உக்க வைக்கும் பொறிமுறையை தொழிற்சாலை வாயிலாக ஆரம்பித்து மக்களுக்கு கிடைக்கச் செய்யலாம்.

வீட்டுத்தோட்டத்தில் தாவரங்கள் கொள்கலனை முழுவதுமாக மூடி வளர்ந்திருப்பதனை அனுமதியாதீர்கள். கீழ்புறத்தில் தேவையானளவிற்கு கத்தரித்து கொள்கலனினுள் உள்ளிருப்பதனை நீங்கள் கண்களால் காணக்கூடியவாறு தாவரத்தைக் கத்தரித்

அந்த இடங்கள் நுளம்புகளின் வாழிடமாக இலகுவில் மாறி விடும். பின்பென்ன? எமது அசண்டையீனத்தினால் நாமே நுளம்பு பெருக்கத்திற்கு காரணமாகி விடுபோம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 145







த்தில் சடுதியாக இருட்டி பெய்த மழை பலரையும் வெருட்டியும் போட்டிருக்கின்றது. இவ்வாறு மழைபெய்யும் இடங்களில் காணப்படும் கவனிப்பாரற்றுச் சிதறிக்கிடக்கும் இன்னும் அவரவர் வீடுகளில் வேலை செய்யும் தளங்களில் கவனமின்றி விசிறப்பட்டிருக்கும் பயன்படுத்திய பிளாஸ்ரிக் மற்றும் தகரத்திலான கொள்கலன்கள் மழைநீரை கிடைக்கின்ற நீரை விரும்பியோ விரும்பாமலோ தேக்கி வைக்கக்கூடிய வசதிகளைக் கொண்டிருக்கின்றன. சிறிய பெரிய கொள்கலன்களில் இலகுவாக நுளம்பு பெருக்கமடைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமே. அதிலும் மழை நீர் தேங்கியிருக்கும் இடங்களில் டெங்கு நுளம்பு போன்றன இலகுவாக வளரக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமே. நாம் அவ்வாறான இடங்களில் நீர் தொடர்ச்சியாக தேங்காது தடுத்தால் நுளம்பு பெருகுவதனை இலகுவாக கட்டுப்படுத்தலாம்.

வீட்டுத்தோட்டங்களில் இன்னும் பாடசாலைத் தோட்டங்களில் பலவகையான பயனற்றதென கருதப்படும் இன்னும் பாவித்த கொள்கலன்களில் தாவரங்கள் இலகுவாக வளர்க்கப்படுவதனை அவதானிக்கலாம். "கொள்கலனில் பயிர்செய்கை" என்னும் முறையின் கீழானதாக இதனை இலகுவாக தெரிவுசெய்து மக்கள் பயன்படுத்துவதனை காணலாம். அதிலும் பயன்படுத்தப்பட்ட வெற்றுப் போத்தல்கள் குறிப்பாக வெற்று பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்

பயன்படுத்துவதனையும் அவற்றை நிறமூட்டி அழகாக வைத்திருப்பதனையும் காணலாம். ஆனால் இவ்வாறான கொள் கலன்களில் நீர்வழிந்தோடுவதற்கான வழிமுறை செய்யப்படாது விட்டிருந்தால் நீர் தேங்கி நிற்பதற்கு வாய்ப்பாகிவிடும். தொடர்ச்சியாக ஆகக்குறைந்தது 7 நாட்கள் நீர் தேங்கி நிற்குமாயின் அதிலே நுளம்பு முட்டையிட்டு குடம்பியாகி பின்னர் கூட்டுப்புழுவாகி இறுதியில் நிறைவுடலியாகிவிடும். ஏடிஸ் இஜிப்ரி (Aedes aegypti) நுளம்பினுடைய வாழ்க்கை வட்டம் மிகவும் குறுகியது. முட்டை 2-4 நாட்களில் குடம்பியாகிவிடும். குடம்பி தேங்கியிருக்கும் நீரில் வளர்ந்து ஆகக்குறைந்தது 4-6 நாட்களில் கூட்டுப்புழுவாகிவிடும். கூட்டுப்புழு 2 நாட்களில் நிறைவுடலியாகிவிடும். நிறைவுடலி பெண் நுளம்பு மனிதரைக்கடிக்கும் போது டெங்கு வைரசினை மனிதனில் உட்செலுத்திவிடும். நிறைவுடலி நுளம்பு 2 கிழமையிலிருந்து ஒரு மாதத்திற்கு வாழக்கூடியது என்றால் எத்தனை பேருக்கு அது டெங்கு நோயை காவிச்செல்ல முடியும் என கணக்கிட்டுப் பாருங்கள். கவனியாது நீர் தேங்க விட்டிருக்கும் இடங்களை தெரிவுசெய்து அதனை துப்புரவாக வைத்திருத்தல் முக்கியமானதாகும்.

எங்கள் வீட்டில் உற்பத்தியாகும் நுளம்பு மற்றையவரைத் தான் கடிக்கும் என கனவு காணாதீர்கள். அது எம்மையும் கடிக்கும் என்பதுடன் எமக்கும் டெங்கு நோயினைப் பரப்பவல்லது என்பதனையும் மற்றையவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். டெங்கு



நோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியாதென்பதனையும் கவனத்திற்கொள்ள வேண்டும். வீடுகள், காணிகள், அலுவலகங்கள் இன்னும் தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் நீர் தேங்கியிருக்கக்கூடிய இடங்களை இனங்கண்டு பொதுநலன் நோக்கி அனைவரும் முன்னின்று இந்த நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

வீட்டுத்தோட்டத்தில் தாவரங்கள் வளர்ப்பதற்காக மேற்கூறிய கொள்கலன்களில் நீர் தொடர்ச்சியாக தேங்கி நிற்கின்றதா என்பதனை தினமும் அவதானிக்க வேண்டும். நீங்கள் பயன்படுத்தும் மண், உக்கல் மற்றும் பசளை என்பன இறுக்கமடைந்திருந்தால் இவ்வாறான கொள்கலன்களில் நீர் வழிந்தோடாது அப்படியே தேங்கி நிற்கும். தொடர்ச்சியாக தேங்கி நிற்கின்றதென்றால் உடனடியாக அந்த நீரை கொள்க

தல் வேண்டும். நன்றாக உக்காத எருவை அல்லது கூட்டெருவை பயன்படுத்தாதீர்கள். நன்றாக உக்காது விட்டால் அவை இலகுவில் உக்குவதற்காக கால அளவு அதிகமாகவும் அதனால் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவும் ஏற்படும்.

வீட்டுத் தோட்டத்தில் ஆங்காங்கே காணப்படும் தென்னை கோம்பைகள், சிரட்டை மற்றும் சிறிய மூடிகள் என்பனவற்றில் மழைநீர் தேங்கியிருப்பதனை நாம் இனங்கண்டு அவற்றை சேகரித்து நீரினை அப்புறப்படுத்தல் வேண்டும். மேலும் பொதுவாக இனங்கண்ட பிரச்சினைகளாக கொள்கலன்களில் தாவரங்களை வளர்க்கும்போது அவை அளவுக்கதிகமாக வளர்ந்து கொள்கலனை மூடியிருப்பதனால் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அவற்றிக் கீழாக சிறிய பாத்திரங்களில் நீர் தேங்கியிருப்பதனை நாம் கவனிக்கத் தவறியிருப்போம்.

வீட்டுத் தோட்டத்தில் தாவரங்களை வளர்க்கும் போது நிலத்தில் வளர்ப்பது நல்லது. இல்லாதுவிட்டால் அதற்கான மாற்றுவழியினையும் நாம் தெரிந்தெடுத்து பயன்படுத்த வேண்டும். வீட்டுத் தோட்டத்தில் நீர் அதிகம் நாட்டமற்ற அல்லது நீர் அதிகம் தேவைப்படாத தாவர வகைகளுக்கு முன்னுரிமை கொடுக்கலாம். தினமும் வீட்டுத் தோட்டத்திலுள்ள தாவரங்களுக்கும் இன்னும் வேறு இடங்களிலிருந்து தருவிக்கப்படும் புதிய வகை தாவரங்களுக்கும் நாம் தேவையான வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். கொள்கலன்களை சுத்தப்படுத்தி மேலும் முக்கிய தாவரங்களை நடவு செய்வதற்கும் வழிவகை இருக்க வேண்டும்.

வீட்டுத்தோட்டமென்பது உங்களுக்கான உற்பத்தியை சுத்தமாக சிறப்பாக விளைத்திறன் மிக்கதாக ஆக்க வேண்டியது பொறுப்பு. இதுவொரு தேசத்துக்கான பிரச்சினை. எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு நாம் பொறுப்புடன் பங்காற்ற வேண்டியது அவசியமாகும். அனைவரும் ஒன்றுபட்டால் தான் உண்டு வாழ்வு இதனை நாமனைவரும் உணரத்தலைப்படுவதுஎப்போது?

டெங்கு நோய் தென்பகுதியிலிருந்து அதிகம் பேருக்கு தொற்றுதலாகி தற்போது அந்த ஆய்வுக்கான கருத்தரங்கு நடைபெறவிருக்கின்றது. டெங்கு நோயினை கட்டுப்படுத்தல் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சி அனைவருக்கும் தெரியவேண்டும். இது பற்றிய அறிவூட்டல் கண்காட்சியினை இலங்கை நுண்ணங்கியலாளர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை நடத்த திட்டமிட்டிருக்கின்றது. அதனை நடத்துவதற்கு இலங்கை நுண்ணங்கியலாளர் கள் சங்கத்தின் அனுசரணை யுடன் அதன் தலைவி பேராசிரியை வசந்தி தேவநேசன் தலைமையின் கீழ் விரைவில் பல பாடசாலைகளிலும் இந்நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

## யாழ்.மாவட்ட

# பேக்கரி உரிமையாளர் சங்கம்

Jaffna District

# Master Bakers Association

இல. 183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

பதிவு இல. 649
TEL:- 021 222 3814

JDMBA



## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் புதிய கட்டட திறப்பு விழாவும் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவும்

இப்புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 2017.02.09 ஆம் திகதி சங்க அங்கத்தவர்களால் நாட்டப்பட்டு சங்கத்தின் செயலாளர் **திரு.கா.பாஸ்கரன்** அவர்களின் துரித முயற்சியினாலும் நிர்வாக சபையினரது ஒத்துழைப்புடனும் சங்க அங்கத்தவர்களின் நிதிப்பங்களிப்புடனும் கட்டப்பட்டு

**2017.09.16 ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில்**
**சங்கத்தலைவர் திரு.இ.பேரின்பநாயகம்**

அவர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சங்க அங்கத்தவர்கள் மற்றும் யாழ்.மாவட்டத்திலுள்ள பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள், முன்னாள் பணியாளர்கள் அனைவரும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நெறியாளர்குழு சார்பில்**
**செயலாளர்.**

(சி-9651)

**முக்கிய குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

# நீதிபதிகளின் எச்சரிக்கையையடுத்து போராட்டம் தற்காலிக வாபஸ்

## ஜாக்டோ – ஜியோ நிர்வாகிகள் அறிவிப்பு

(மதுரை)

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற மதுரை கிளையின் எச்சரிக்கையை அடுத்து போராட்டத்தை அரசு ஊழியர்கள் வாபஸ் பெறுவதாக அறிவிததுள்ளனர்.

இதுகுறித்து உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஜாக்டோ - ஜியோ நிர்வாகிகள் நீதிபதிகளிடம் ஒப்புதல் அளித்துள்ளனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பினர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டத்துக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்திருந்தது. எனினும் தடையை மீறி அரச ஊழியர்கள் தங்களது போராட்டதகை தொடரந்து வந்தனர.

இதனையடுத்து அரச ஊழியர்கள் ஒரு மணிநேரத்தில் காத்திருப்பு போராட்டத்தை கைவிட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவிட்டது. போராட்டத்தை கைவிடாவிட்டால் அரச ஊழியர் கள், ஆசிரியர்கள் அப்புறப்ப டுத்தப்படுவார்கள். நிபந்தனையின்றி வேலை நிறுத்தத்தை கைவிட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவதாக உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஜாக்டோ - ஜியோ நிர்வாகிகள் நீதிபதிகளிடம் ஒப்புதல் அளித்துள்ளனர்.

மேலும் அரச ஊழியர்கள் - ஆசிரியர்கள் உடனடியாக பணிக்கு திரும்ப வேணடும் என ஜாக்டோ - ஜியோ நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.


இதனிடையே நேற்று பிற்பகல் 2 மணிக்குள் அரச ஊழியர்க்ள் பணிக்கு திரும்ப வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.



வெள்ளக்கிழமை புனிதமான நாள என்பதால் இன்றே பணிக்கு திரும்புங்கள் என நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

மேலும் செப்டெம்பர் 21ஆம் திகதி தலைமைச்செயலாளர் நேரில் ஆஜராகி இவ் வழக்கில் விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் அரசுக்கு எதிரான. போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அரசு ஊழியர்களை விடுவிக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். (8)

# இரட்டை இலை யாருக்கு?



(மதுரை)

இரட்டை இலை சின்னம் யாருக்கு என ஒக்டோபர் 31ஆம திகதிக்குள் முடிவெடுக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது. அ.தி.மு.க எம்பிக்கள், சட்டமன்ற உறுபபினர்கள் மற்றும் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு உள்ள அணிக்கே இரட்டை இலை சின்னத்தை வழங்க வேண்டும் என திருச்செந்தூரைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன் என்பவர் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார்.

அதில் அ.தி.மு.கவில் முக்கிய நிர்வாகிகள், செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து பிரிவு நிர் வாகிகள் 3100 பேர் உள்ளனர் எனவும், இவர்களை ஒரே இடத்தில் கூட்டி ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி மேற்பார்வையில் அ.தி.மு.க நிர்வாகிகள் தேர்தலை நடத்தி வெற்றிபெறும் அணியிடம் இரட்டை இலைச் சின்னத்தை ஒப்படைக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில குறிப்பிடடிருந்தார்.

இந்த வழக்கை நீதிபதிகள் சசிதரன், சுவாமிநாதன் அமர்வு விசாரித்தது. இந்த விசாரணையின் போது வி.கே.சசிகலா, டி.டி.வி. தினகரன் சார்பில் சட்டத்தரணிகள ஆஜராகவில்லை. இதையடுத்து நீதிபதிகள், இந்த வழக்கின் இறுதி தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

இதனிடையே இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது. அப்போது இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் தெரிவிக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு நீதிபதிகள் உத்தரவிடடனர். அ.தி.மு.க. அணிகள் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரங்களை ஆய்வு செய்து முடிவு எடுக்க வேண்டும் என தலைமை தேர்தல் ஆணையத்துக்கு நீதிபதிகள் ஆணையிட்டனர். (8)

# அமெரிக்கா சாம்பலாக்கப்படும் வடகொரியா நேரடி மிரட்டல்

(பியாங் யாங்)

பொருளாதாரத் தடைக்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஜப்பான் மூழ்கடிக்கப்படும், அமெரிக்கா சாம்பலாக்கப்படும என்று வட கொரியாமிரட்டல்விடுத்துள்ளது.



கடந்த செப்டெம்பர் மாதம 3ஆம் திகதி 6ஆவது முறையாக அணுகுண்டு சோதனையை நடத்தியது வடகொரியா. இது உலகநாடுகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனையடுத்து அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புச் சபை யில் வடகொரியாவின் மீது புதிய பொருளாதாரத்தடையை கொண்டு வந்து அதனை ஒரு மனதாக நிறைவேற்றியது.

தங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஜப்பான் மூழ்கடிக்கப்படும், அமெரிக்கா சாம்பலாக்கப்படும் என்று வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

'வடகொரியாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடையே நிகழும் உறவு முறையை மேற்பார்வையிடும் கொரியா ஆசியா - பசுபிக் சமாதான அமைபபானது வடகொரியா மீது விதிக்கபபட்டுள்ள புதிய பொருளாதாரத தடைக்கு காரணமான அமெரிக்கா விரைவில் உடைக் கப்படும என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்தக் குழு வெளியிட்ட அறிக்கை பற்றி வட கொரிய அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில், "நான்கு புறங்களிலும் கடலால் சூழப்பட் டுள்ள ஜப்பான் எப்போதோ அணுகுண டால் மூழ்கியிருக்கக்கூடும். ஜப்பான் இனி எங்கள் அருகில் இருக்கத் தேவையில்லை.

வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபையில் பொருளா தாரத் தடை விதித்த அமெ ரிக்கா சாம் பலாக்கப்படும் வெறிபிடித்த நாயை அடித்துக் கொல்வது போல் அமெ ரிககாவும் அழிக்கப்படும். அமெ ரிக்காவுக்கு துணையிருக்கும் ஜப்பானும் மூழ்கடிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. ஜப்பான் கடலில் நடுத்தர ஏவு கணை சோதனையில ஈடுபட்ட பறகு ஜப்பானுக்கு மீண்டும் வட கொரியா நேரடியாக மிரட்டல் விடுத்துள்ளது. (8)

# நெடுவாசலில் 156ஆவது நாளாக போராட்டம்



(ஆலங்குடி)

ஐதரோ காபன் திட்டத்தை இரத்து செய்யக் கோரி புதுக்கோட்டைமாவட்டம், நெடுவாசல் கிராமத்தில் கிராம மக்கள் 156 நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம ஆலங்குடி அருகே உள்ள நெடுவாசல் உட்பட நாடு முழுவதும் 31 இடங்களில் ஐதரோ காபன் எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியது.

விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஐதரோ காபன் திட்டம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே நெடுவாசலில் போராட்டம் தொடங்கி விட்டது. ஊர் மக்கள் ஒன்றுகூடி, ஐதரோ காபன் எதிர்ப்பு கூட்டியக்கம் என்ற பெயரில் இயக்கத்தை கட்டமைத்து தொடர்ந்து அறவழியில் போராடி வருகிறார்கள்.

முதல் கட்டமாக பெப்ரவரி 26 ஆம் திகதி நடந்த போராட்டத்தில் கிராம மக்கள், மாணவர்கள்பல்வேறு அமைப்பினர், அரசியல் கட்சியினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஐதரோ காபன் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி பெப்ரவரி 26 ஆம் திகதி அன்று புதுக்கோட்டையிலும் அறவழிப் போராட்டம் நடந்தது.

முதல் கட்டப்போராட்டம் கைவிடப்பட்ட நிலையில் 2-ஆம் கட்டப் போராட்டத்தை கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி தொடக்கினர்.

தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். 156-வது நாளான நேற்றும் போராட்டம் நடந்தது.

விவசாயிகள், அப்பகுதி பெண்கள், விவசாயிகள் திரண்டு நாடியம்மன் கோயில் திடலில் மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கோஷஙகளை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் ஐதரோ காபன் திட்டத்திற்கு எதிரான பதாகைகளை கைகளில் ஏந்திக் கொண்டும், இத்திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தியும் கோஷங்களை எழுப்பி போராட்டம் நடத்தி வருகின்றனர். (8)

# தன்னிலை மாறாத வடகொரியா

# நேற்று மீண்டுமோர் ஏவுகணைச் சோதனை

(வோஷிங்டன்)

வடகொரியா இரண்டாவது முறையாக ஜப்பான் வழியாக கண்டம் விட்டு கண்டம்பாயும்ஏவுகணையை வீசியுள்ளமை பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியா சமீபத்தில் 6-வது தடவையாக அணுகுண்டு சோதனை நடத்தியது.

அதைத்தொடர்ந்து அமெரிக்கா முயற்சியால் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மூலம் வடகொரியா மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டது.

அதன் பிறகாவது வடகொரியா ஏவுகணை சோதனைகள்மற்றும் அணு ஆயுத சோதனையை நிறுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வடகொரியா தன் நிலையில் இருந்து மாறவில்லை. மாறாக நேற்று மீண்டும் ஒரு ஏவுகணையை வீசி சோதனை நடத்தியது.

இது இடைப்பட்ட தூரம் சென்று தாக்கக்கூடிய திறன் படைத்தது. இந்த தகவலை அமெரிக்காவுக்கான பசுபிக் கமாண்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை ஜப்பான் மீது பறந்து சென்று பசுபிக் கடலில் விழுந்தது என்ற அதர்ச்சி தகவலையும் வெளியிட்டுள்ளது.

ஏவுகணை வடகொரியாவின் சுனான் பகுதியில் இருந்து கிழக்கு நோக்கி செலுத்தப்பட்டது என பசுபிக்



கமாண்ட் நிறுவன அதிகாரி தேவ் பென்காம் தெரிவித்தார்.

இந்தஏவுகணைசோதனை தங்களுக்கு விடுத்த அச்சுறுத்தல் அல்ல என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதே கருத்தை வடஅமெரிக்க விண்வெளி பாதுகாப்பு கமாண்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் தங்களது நட்பு நாடுகளான தென் கொரியா, ஜப்பான். மற்றும் அயர்ன்கிலாட் பகுதிகளுக்கு தான் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அதை எதிர் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் கூறியுள்ளது. (8)




# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் தற்கொலைப்படைத்தாக்குதல்

## ஈராக்கில் 74 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய வெடி

தில் நசிரியா பகுதியில் வீதியோர உணவகம் ஒன்றில் நேற்று தீவிரவாதி ஒருவன்

லைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என அதிகாரிகள் தெரிவித்




குண்டு தாக்குதல்களில் 74 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளதால் பலி எண்ணிக்கை உயரும்என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தை சேர்ந்தவர்கள்தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த கடுமையாக போராடி வருகின்றனர்.

அவர்களது போராட்டத்தை அமெரிக்க படையினரின் உதவியால் ஈராக் தவிடுபொடியாக்கி வருகிறது. ஆனாலும் அவர்கள் தற்கொலைப்படை தாக்குதலை நடத்தி பெருத்த சேதத்தை விளைவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஈராக் நாட்டின் திகார் மாகாணத்

திடீரென நுழைந்தான். அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட தொடங்கினான். இதைத்தொடர்ந்து, அப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனை சாவடியில் அவன் கார் வெடிகுண்டு தாக்குதலை நடத்தினான்.

இந்த இரண்டு தாக்குதல்களிலும் சுமார் 74 பேர் பலியாகியுள்ளனர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதில் ஈரானியர்கள் நான்கு பேர் பலியாகினர்.

மேலும் படுகாயம்அடைந்த பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலைமை கவ

துள்ளனர்.


இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளது. (8)

# சவுதியின் எண்ணெய் கிணறுகளை தாக்குவோம்

## ஹவுத்தி புரட்சிப்படையினர் எச்சரிக்கை

(டுபாய்)

ஏமன் நாட்டின் மீது சவுதி அரேபியா தாக்குதல் நடத்தினால் அந்நாட்டில் உள்ள எண்ணெய் கிணறுகளை தாக்குவோம் என ஹவுத்தி அமைப்பு தலைவர் அப்தல் மாலிக் அல் ஹவுத்தி எச்சரித்துள்ளார்.



ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் சனா உட்பட பல பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அந்த பகுதிகளை சுற்றி சோதனைச் சாவடிகள் அமைத்துள்ளனர்.

சர்வதேச ஆதரவு பெற்றுள்ள ஏமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள்ஆதரவு அளித்து வருகின்றன.

அவர்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி அரேபியா நடத்திவரும் தாக்குதலுக்கு அந்த அமைப்பின் தலைவர் அப்தல் மாலிக் அல் ஹவுத்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து தொலை காட்சியில் பேசிய அவர் ,

எங்கள் மீது சவுதி அரேபியா தாக்குதல் நடத்தினால், நாங்கள் அந்நாட்டின் எண்ணெய்கிணறுகளை இலக்காக கொண்டு தாக்குவோம்.

எங்களால் எதையும்செய்ய முடியும். இதற்கு முன்னர் நாங்கள் இவ்வாறு செய்ததில்லை. எங்களிடம் உள்ள கண்டம்விட்டு கண்டம்தாக்கும் ஏவுகணைகள் மூலம் ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான அபுதாபி மற்றும் சவுதி அரேபியாவின் எந்த இலக்கையும் தாக்க முடியும் என்று தெரிவித்தார்.

ஆனால் இந்த அச்சுறுத்தல்களை நிறைவேற்றும் திறன் ஹவுத்தி அமைப்பினரிடம் உள்ளதா? என்பது தெளிவற்றதாக இருக்கிறது. (8)



பிலிப்பைனஸ் தலைநகர் மணிலா மற்றும் அதன் அருகில் உள்ள மாகாணங்களில் அண்மையில் புயல் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இதில் தாழ்வான பகுதிகளில வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

# குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும்

## இலங்கை உள்ளிட்ட நாடுகளிடம் அமெரிக்க செனட்சபை வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பாரிய கொடூரங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவையுள்ளதாக அமெரிக்க செனட் சபை தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கான நிதியுதவியை 92 வீதத்தினால் குறைக்கும், டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்தின் திட்டத்தை நிராகரித்து, அமெரிக்க செனட் சபையின், ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான உப குழு கடந்த வாரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

"பல நாடுகளில், மரபணுச் சோதனைகள் மூலம், பாரிய கொடூரங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.

எச்சங்களை அடையாளம் காண்பதற்காக, மரபணுச் சோதனைகள் நடத்தப்பட வேண்டியுள்ளது.

இலங்கை, சிரியா, ஈராக், கம்போடியா, எல் சல்வடோர், குவாத்தமாலா ஆகிய நாடுகளில், தடயவியல் அடையாளம் காணும் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

இந்த நாடுகளில், இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான, மனிதவுரிமை மீறல்களுக்கு எதிரான ஏனைய மீறல் களுக்குப் பொறுப்பானவர்க ளைச் சட்டத்தின் முன் நிறுத்தும், நீதித்துறை விசாரணைகள், தேவைப்படுகின்றன.

எனவே, இலங்கைக்கான ஒட்டுமொத்த நிதி வெட்டையும் ஏற்க முடியாது, நிதியளிப்பதற்கு இலங்கைக்கு நிபந்தனைகளை விதிக்கலாம் என்றும் அமெரிக்க செனட் உப குழு தெரிவித்துள்ளது. (இ-7)

## 2020 இல் ரணிலை ஜனாதிபதியாக்க சிலர் பகல் கனவு காண்கின்றனர்

### அருந்திக பெர்னாண்டோ தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய அரசைக் கவிழ்ப்பதற்கு தேவையான அனைத்து விடயங்களிலும் ஈடுபடுவேன் என்று முன்னாள் பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார். "அரச தலைவரின் செயற்பாடுகளில் எந்தவித ஏமாற்றமும் இல்லை. எமக்கு அரசின் செயல்களே அதிருப்தியளிக்கின்றன, இரு கட்சிகளிலும் நல்ல பல அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர். நாட்டு மக்களின் நன்மை கருதி அரசால் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. அதில் எந்தவித தவறும் இல்லை.

2020ஆம் ஆண்டில் பிரதமர் ரணிலை ஜனாதிபதியாக தெரிவு செய்ய ஒரு சிலர் கனவு காண்கின்றனர் எனத் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அருந்திக மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சு.கவை மறுசீரமைக்க பத்துக்குழுக்கள் நியமிப்பு

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மறுசீரமைக்க பத்துக் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீ.சு.கவின் மாதாந்த கூட்டத்தின் போதே இந்த குழுக்கள் நியமிக்கப் பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியின் பணிகளை செய்யாதவர்களை, கட்சிக்கு தீங்கு விளைவிப்பவர்களை கட்சியிலிருந்து அகற்றி அவர்களுக்கு பதிலாக வேறு நபர்களை நியமிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மீன்பிடி படகிற்கு தீ வைப்பு



அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகொன்று தீக்கிரையாகியுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் அம்பாந்தோட்டை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், தனிப்பட்ட விரோதம் காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடற்படையினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள நிலையில் ஏனைய படகுகளுக்கு தீ பரவாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. தீவிபத்து குறித்து நேற்றுமுன்தினம் மாலை படகின் உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## இலங்கை-பாகிஸ்தான் பாதுகாப்பு உடன்பாடு

(கொழும்பு)

கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை உள்ளிட்ட 8 நாடுகளுடன், 'பாகிஸ்தான் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ளதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குராம் டஸ்கிர் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் செனட் சபையில் உரையாற்றிய அவர், "கடந்த ஐந்து ஆண்டுகளில், இலங்கை, ரஷ்யா, சீனா, துருக்கி, பொஸ்னியா, கசகஸ்தான், நோர்வே, ருமேனியா ஆகிய நாடுகளுடன் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்துள்ளது.

பல்வேறு நாடுகளுடன் 17 புரிந்துணர்வு உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு உடன்பாடு, அதன் உள்ளடக்கம் பற்றிய விபரங்களை பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### இதுவும் ஒரு நாகரிகம்

நானும் என்னுடன் பணிபுரியும் சிலரும் ஒன்றாகப் பயணம் செய்து கொண்டிருந்தோம். அப்போது நானும் இன்னொருவருமாக ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே வந்தோம். உடன் வந்த ஒரு நபர் சொன்னார். சேர் எல்லோருமே கலந்து கொள்கின்ற மாதிரியான விடயமாகப் பேசுங்க சேர் என்றார். எனக்கு சுரீர் என்றது.

எவ்வளவோ விடயங்கள் எழுதுகிற எமக்கு இந்த அடிப்படை நாகரிகம் தெரியாமல் போயிற்றே என்பது தான் இது.

எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் இடத்தில் இருவர் மட்டும் தங்களுக்கு மட்டுமே உரிய விடயங்களை விவாதிப்பது நாகரிகமல்ல.

இந்தத் தவறை நாம் செய்யக் கூடாது. எல்லோரையும் ஒரே விடயச் சங்கிலியால் கோர்த்துவிடுவது என்னும் கலையையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

வயது, தகுதி சூழ்நிலை இவற்றை அனுசரித்து விடயத்தை எடுத்துக் கொடுத்து அனைவரும் அந்த உரையாடலில் கலந்து கொள்ளும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நானும் ஒரு நண்பரும் ஓர் அமெரிக்கரைச் சந்திக்கப் போனோம். போன இடத்தில் என் நண்பர் தமிழில் பேச ஆரம்பித்து விட்டார். எனக்கோ தர்மசங்கடம். அமெரிக்க நண்பர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து தயவு செய்து மூவருக்கும் பொதுவான மொழியில் பேசுங்களேன் என்றார்.

மற்ற மொழிக்காரர் ஒன்று கூடி உரையாடும் போது நாம் மட்டும் மொழியால் ஒதுங்குவது நாகரிகம் அல்ல.

இன்னும் சிலர் ஒரு படி மேலே போய் உங்கக்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசவேணும் என்று ஒருவரை மட்டும் அம்போ என நிறுத்திவிட்டு இரண்டாமவரைத் தள்ளிக் கொண்டு போய்விடுவார். இதுவும் நாகரிகம் அல்ல.

ஒரே சமமான நண்பர்கள் இடத்திலே இச் செயல் தவறு என்கிற போது ஏற்றத் தாழ்வு உள்ளவர்கள் நடுவே இப்படிப் பிரித்து அழைத்துச் சென்றால் மற்றவர்களுக்குத் தாழ்வு எண்ணமோ கோபமோ வருத்தமோ மிக அதிகமாக உண்டாகிவிட வாய்ப்பு இருக்கிறது.

உன்னிடம் மட்டும் பேச வேண்டும் என்றால் என்ன அர்த்தம்?

உடன் நிற்பவர் மூன்றாவது நபர், தேவையற்ற நபர் என்றல்லவா ஆகிவிடுகிறது?

ஆக, விடயத்தால், மொழியால் இடத்தில் ஒருவரையோ பலரையோ ஓரங்கட்டுவது முற்றிலும் தவறான செயல்.

இந்த உண்மையை உணர்ந்து பழகினால் நமக்கு ரொம்பவும் இங்கிதம் தெரிந்த மனிதர் என்கிற பாராட்டுக்கிடைக்கும்.

இல்லாவிட்டால் வெறுப்பும் சலிப்பும் தாம் பரிசாகக் கிடைக்கும்.

லேனா தமிழ்வாணன்

# நீர்க்காகம் போர் பயிற்சியை புறக்கணித்தார் ஜனாதிபதி





(கொழும்பு)

விமானப்படை, கடற்படையினரின் பங்களிப்புடன் இலங்கை இராணுவத்தினர் நடத்தும் நீர்க்காகம் போர்ப் பயிற்சி நேற்று முன்தினம் திருகோணமலை குச்சவெளி கடற்கரையில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு. இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த போர்ப்பயிற்சியை ஜனாதிபதி நேரில் பார்வையிடுவார் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் நம்பிக்கை வெளியிடப்பட்ட போதிலும், மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டுப் பயிற்சியை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகள் உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டனர்.

இந்தப் போர்ப் பயிற்சியில் கடற்படையின் போர்க்கப்பல்கள், தாக்குதல் படகுகள், தரையிறங்கு கலங்கள், கரையோர ரோந்துப் படகுகள் பங்கேற்றன.

விமானப்படையின் குண்டு வீசு விமானங்கள், உலங்கு வானூர்திகளும், இராணுவத்தின் கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

கடல் வழியாகவும் வான் வழியாகவும் தரையிறக்கப்பட்ட படையினரை, எதிரிப் படைகளின் முகாமை தாக்கியழிக்கும் சண்டைகள் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன.

இதில் 13 நாடுகளைச் சேர்ந்த 69 படை அதிகாரிகளும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரித்தானியாவில் சைட்டத்திற்கு தடை

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி பிரித்தானிய மருத்துவ சபையின் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய மருத்துவ சபையினால் ஏற்றுக்கொள்ளப்படாத மருத்துவப் பட்டப்படிப்பு வழங்கும் பல நிறுவனங்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. இந்தப்பட்டியலிலேயே சைட்டம் மருத்துவக் கல்லூரியும் உள்வாங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரித்தானிய மருத்துவ சபையின் PLAB பரீட்சைக்கு முகங்கொடுக்கவோ, அந்நாட்டு மருத்துவ சபையில் பதிவு செய்யவோ குறித்த பட்டியலில் காணப்படும் நிறுவனங்களினால் வழங்கப்படும் பட்டப்படிப்பு ஒரு தகைமையாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு மேற்கொண்ட மாணவர் ஒருவர் பிரித்தானியாவின் PLAB பரீட்சைக்கு முகங்கொடுக்க விண்ணப்பித்துள்ள அதேவேளை, குறித்த விண்ணப்பத்தை அந்நாட்டு மருத்துவ சபை நிராகரித்துள்ளது. இலங்கை மருத்துவ சபை வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பிரித்தானிய மருத்துவ சபை குறித்த விண்ணப்பத்தை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை
## இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி அறிவித்தல்

பளை பிரதேச எல்லைக்குட்பட்ட இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ்வரும் கடைகளினை 01.10.2017 ஆம் திகதியிலிருந்து நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 18.09.2017 தொடக்கம் 29.09.2017 நண்பகல் 12 மணிவரையான அலுவலக நேரம்

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 29.09.2017 பிற்பகல் 1.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 29.09.2017 பிற்பகல் 1.30 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | p.s-02 | 330,000.00 | 33,000.00 | 2000.00 |
| 02 | p.s-04 | 330,000.00 | 33,000.00 | 2000.00 |
| 03 | p.s-05 | 192,000.00 | 19,200.00 | 2000.00 |
| 04 | p.s-06 | 192,000.00 | 19,200.00 | 2000.00 |
| 05 | p.s-07 | 192,000.00 | 19,200.00 | 2000.00 |
| 06 | p.s-08 | 168,000.00 | 16,800.00 | 2000.00 |
| 07 | p.s-09 | 168,000.00 | 16,800.00 | 2000.00 |
| 08 | p.s-10 | 168,000.00 | 16,800.00 | 2000.00 |
| 09 | p.s-11 | 153,600.00 | 15,360.00 | 2000.00 |
| 10 | p.s-12 | 153,600.00 | 15,360.00 | 2000.00 |
| 11 | p.s-13 | 153,600.00 | 15,360.00 | 2000.00 |
| 12 | p.s-14 | 153,600.00 | 15,360.00 | 2000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.

03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 29.09.2017 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்குகாலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசெம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்.

06. கேள்விச்சித்திகாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித்தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும்.

07. சித்திகர குத்தகைகாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.

08. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.

09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமை கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமை சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளர்/தவிசாளருக்கு உண்டு.

11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (சி-9652)

செயலாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை. 16.09.2017



## வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

### வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக் கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலை பேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.09.2017 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

- பிரதம ஆசிரியர், வலம்புரி.

# மீள்குடியமர்வு குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு முதல் காங்கேசன்துறை பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இன்று வரைக்கும் மீள்குடியேற்றப்படாமல் பலகஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களை காங்கேசன்துறை ஜே/233, ஜே/234, ஜே/235 கிராம சேவகர் பிரிவுகளில் விடுவிக்கப்படாத பகுதிகளில் மீள்குடியேறுவது சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றினை சோண்டாவில் உப்புமட சந்தி, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வேதபாராயண சன சமூக நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஒழுங்குசெய்துள்ளோம். எனவே காங்கேசன்துறை ஜே/233, ஜே/234, ஜே/235 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

# சைவ மாநாட்டின் இரண்டாம் நாள் இன்று

சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.66, கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆசியுரையை சைவக் குருமார் அர்ச்சகர் சபைச் செயலர் சிவஸ்ரீ ச.மகாலிங்க சிவக்குருக்கள் வழங்குவார்.

"மாறிவரும் சமுதாய மாற்றத்தில் சைவப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினையும் சவால்களும்" எனும் தலைப்பில் சொற்பொழிவினை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தினி அருளானந்தமும் "சைவ சமயமே சமயம்" எனும் தலைப்பிலான சிறப்புரையினை அகில இலங்கை கம்பன் கழகத் தலைவர் கம்பவாரிதி இ.ஜெயராஜும் நிகழ்துவர். (இ-3)

# விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 29.09.2017-31.09.2017 திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலைஅகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாக்கும் முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்துவரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபட முடியும்.

இந்த தேசிய நிகழ்வு அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்பரவாக பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந் நாட்களில் பின்வரும் கிராம அலுவலர் பகுதிகளில் டெங்குகளத்தரிசிப்புநடைபெறும்.

20.09.2017 அரியாலை ஜே/91,92,94, 21.09.2017 குருநகர் II ஜே/67,68,75, 22.09.2017 பஸார் I ஜே/79, 80,82, 23.09.2017 நாவாந்துறை ஜே/85,87,88, 25.09.2017 வண்ணார்பண்ணை ஜே/100,102,104, 26.09.2017 நல்லூர் ஜே/107,108,109.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலமைகள் காணப்படும் அனைத்து அரச தனியார், நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (இ

# முத்திரையிடல்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் தமது நிறுவை கருவிகளுக்கு முத்திரை இட்டுக்கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் கோரியுள்ளார்.


நாளை மறுதினம் 18ஆம் திகதியும் 19ஆம் திகதியும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை மேற்படி பிரதேச சபையின் உடுப்பிட்டி அலுவலகத்திலும் 20,21,22 ஆகிய மூன்று நாட்களும் காலை 9 மணியிலிருந்து 3 மணிவரை மாலு சந்தியிலுள்ள பிரதேச சபை கட்டடத்திலும் முத்திரையிடும் பணி இடம்பெறும். (இ-60)

# வரட்சி நிவாரணம் வழங்கல்



கரவெட்டி பிரதேச செயலகத்தின் இலகு வேலைத்திட்டத்தின் கீழ் அப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு வரட்சி நிவாரணம் அண்மையில் கரவெட்டி உதவி பிரதேச செயலர் ரஜீவ் தலைமையில் வழங்கப்பட்டது. (இ-60)

# கடிதத் தலைப்பில் தமிழின் நிலை



தொழில் தனணக்களம்-ஊழியர் செமலாப நிதி
EMPLOYEES PROVIDENT FUND - DEPARTMENT OF LABOUR
தொலைபேசி Telephone 011-2368916 011-2581142 011-2581146
எனது இல My No.
49/AF/2017
உமது இல Your No.
தொலைநகல் Fax 011-2368914
ஊழியர் சேமலாப நிதி, தொழில் செயலகம், த.பெ.இல 1508, கொளும்பு 05.
Employees' Provident Fund, Labour Secretariat, P.O.Box 1508, Colombo 05.
2017.08.

(கரணவாய்)

தொழில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதியத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றின் தலைப்பு தமிழ் பிழையுடன் காணப்படுகின்றது.

நாட்டில் மும்மொழிக் கொள்கை அமுலில் உள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையிலும் அனுப்பப்பட்டுள்ள கடிதத் தலைப்பு ஒன்றில் மூன்று இடத்தில் தமிழ் பிழை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# பிரிவுபசாரம்

குருநகர் றெக்கள மேசன் கிழக்கு ஜே/68 கிராம சேவையாளர் பிரிவின் முன்னாள் கிராம சேவையாளர் க.நித்தியானந்தனின் பிரிவுபசாரம் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சென். றெக்ஸ் ஆலய வளாகத்தில் நடைபெறும் என றெக்கள மேசன் கிராம சேவையாளர் பிரிவு விழாக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ-10-106)

# இணுவில் இந்துவின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார். (இ-10-105)

# கைதடி குருசாமி வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி குருசாமி வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கௌரவ விருந்தினராக பரிசில் நிதிய உறுப்பினர் சி.செல்வநாயகமும் கலந்து கொள்வர். (இ-7)



விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

# வலய மட்டப் போட்டிகள்

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வலயமட்ட திருக்குறள் மனனம், பண்ணிசை மற்றும் ஆங்கில குழுப்பாடல் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெறுமென வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (இ-10-105)

# துன்னாலையில் வன்முறை! மேலும் மூவர் நேற்று கைது

## எண்ணிக்கை 42 ஆக உயர்வு

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் மூவர் நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜுலை மாதம் 09ஆம் திகதி வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் மணல் கடத்தி வந்தோரின் ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்துஇடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் பின்னர் கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பிலும் 39 பேர் ஏற்கனவே கைதாகியிருந்தனர்.

இவ்39பேரினையும் கைது செய்வதற்கு பொலிஸார் விசேட அதிரடிப்படையினரின் உதவியினைக் கோரியிருந்தனர். அவர்களின் உதவியுடன் துன்னாலைப்பகுதி மூன்று நாட்கள் சுற்றிவளைக்கப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன்பின்னர் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதனால் இச்சம்பவத்துடன் தொடர்புபடாதவர்களும் பாதிக்கப்படுவதாக வடமாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் றொசான் பெனாண்டோவிடம் அப்பகுதி மக்கள் முறையிட்டனர்.

இதனையடுத்து சுற்றிவளைப்புக்கள் இடம்பெறமாட்டாது என அவர் உறுதியளித்திருந்தார். அதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சரணடையுமாறும் கோரியிருந்தார்.

தொடர்ந்தும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தலைமறைவாக இருந்துவந்த நிலையில் அவர்களை தேடும் நடவடிக்கையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டிருந்தனர்.


நேற்று 15.09.2017 காலை 6.15 மணியளவில் கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்து ஒன்றில் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பயணிப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-60)

# சைவ மாநாடு யாழில் நேற்று ஆரம்பம்














சைவ பரிபாலன சபை நடத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கைச் சைவ மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் வழிபாடுகள் இடம்பெற்று தாள வாத்தியங்களுடன் ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக விழா மண்டபத்தை வந்தடைந்தது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கியிருந்தார். அதனை தொடர்ந்து சிறப்புரைகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொண்டதுடன் இந்துசமய பெரியார்கள், சைவ பரிபாலன சபையினர், ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1191

Search for people, places and things Nagendram Home

### கோகுலன்

மின்சாரம் இல்லாத போது பிரிஜில் பொருட்களுக்கு குளிர்விட்டுப் போயிடுது...!



சம்சாரம் இல்லாதபோது வீட்டில் இருக்கிற கணவனுக்கு குளிர்விட்டுப் போகிறது...!

### நர்மதா

எப்பவும் தோத்த மாதிரி
மூஞ்சய வைச்சுக்காம...
என்றைக்காவது ஜெயிப்போம்
என்ற திமிரோட
கொலரை தூக்கி விட்டுட்டு
திரியனும்... அப்போ தான்
ஜெயிக்க முடியும்.

### அனித்தா

நைட்டான தூக்கமே வரமாட்டேன்கிது. பகல்னா தூக்கம் மட்டும்தான் வருது...



அமெரிக்காவில பிறக்க வேண்டிய நான் இங்க பிறந்து கஷ்டப்படுகிறேன்.

### ரஞ்சனி

கவிதை...கவிதை

அவள் முகம் -ஞாயிறு
அவள் கண்கள் -திங்கள்
அவள் உதடு -செவ்வாய்
அவள் கன்னம் -புதன்
அவள் மூக்கு - வியாழன்
அவள் பற்கள் - வெள்ளி
மொத்தத்தில் அவள் ஒரு சனி

### விதுசா

"என் நண்பர் ராஜா... கையில
இரண்டு எலும்பு முறிந்து
ஆஸ்பத்தியிலே
அட்மிட் ஆயிருக்கிறார்"
"அட பாவமே... நேற்று அவரை
ஒரு பெண்ணோட
தியேட்டரில பார்த்தேனே?"
கரெக்ட்... அதை அவர்
பொண்டாட்டியும் பார்த்திட்டாங்க"

### கங்கயன்

முன்ன எல்லாம் உப்பு இல்ல காரம் இல்ல அப்டி இப்டி னு சன்ட வரும்..



இப்ப பொண்டாட்டி அடிச்சத கூட தெரியாம (போன நோண்டிக்கிட்டு) கவலை இல்லாமல் இருக்கோம்..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## பிக்போஸ் 2இல் நிச்சயமாக கலந்துகொள்வேன் பிரபல நடிகை யாஷிகா



பிரபல நடிகை ஒருவர் தமிழ் பிக்போஸ் ஷோவின் இரண்டாவது சீசனில் கலந்துகொள்வேன் என அறிவித்துள்ளார்.

துருவங்கள் பதினாறு படத்தில் நடித்த யாஷிகா ஆனந்த் தான் இப்படி கூறியுள்ளார். சமீபத்தில் ஒரு பேட்டியில் பேசிய அவர் எனக்கு பிக்போஸ் ஷோவில் கலந்து கொள்ள அழைப்பு வந்தது. ஆனால் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் நிச்சயம் இரண்டாவது சீசனில் கலந்துகொள்வேன் என யாஷிகா அவர் கூறியுள்ளார்.

## கட்டிப்பிடி வைத்தியத்தில் PHD முடித்திருக்கிறாரு யாரை கூறுகிறார் கணேஷ்?



பிக்போஸ் நிகழ்ச்சியில் இனி வரும் Task மிகவும் மோசமாக இருக்கும் என கமல்ஹாசன் கூறியிருந்தார். அதே போல் தான் பிக்போஸ் Taskகையும் கடினமாக கொடுக்கிறார். போட்டியாளர்கள் செய்வதை பார்த்தால் நமக்கே மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இந்த நிலையில் போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் வார்த்தைகளால் கேலி கிண்டல் செய்ய வேண்டும் என்று Task கொடுக்கிறார். அதில் கணேஷ் வெங்கட்ராமன், ஹரிஷிடம் கட்டிபிடி வைத்தியதில் யாரு PhD செய்திருப்பது. சிநேகன் வெளியில் போனதும் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என கூறுகிறார்.

## ஓவியா வேணாம் தமனாவுடன் டூயட் பாடிய ஆரவ்



நடிகை ஓவியாவின் காதலை ஆரவ் நிராகரித்தது தான் அவர் வெளியேறுவதற்கு காரணமாக அமைந்தது. தனக்கு ரசிகர்களின் பலமான ஆதரவு இருந்தும், ஓவியா வெளியேறினார்.

இந்நிலையில் பிக்போஸ் வீட்டில் இருப்பவர்கள் ஜோடியாக பிரிந்து, இருவருக்கும் நடுவில் உள்ள கயிறை தனியாக பிரிக்க வேண்டும் என டாஸ்க் கொடுக்கப்பட்டது. அது முடியும் வரை அவர்கள் அனைத்து பணி-களையும் ஒன்றாகவே செய்யவேண்டும் என கூறப்பட்டது.

ஆரவ், ஹரிஷ் கல்யாண் ஆகியோர் ஜோடியாக பிரிந்தனர். கொஞ்ச நேரம் கழித்து ஹரிஷ் பாத்ரூம் சென்ற போது ஆரவ் வெளியில் நின்றுகொண்டிருந்தார். அப்போது பாத்ரூம் கதவில் இருந்த தமன்னா புகைப்படத்தை பார்த்து பாட ஆரம்பித்துவிட்டார்.

பின்னர் வெளியில் வந்த ஹரிஸ், என்ன தமன்னாவுடன் டூயட்டா? என கேட்டு ஆரவ்வை கலாய்த்து விட்டார்.

## பிக்போஸ் ஓவியா இனி பிரபல விளம்பரத்தில்

பிக்போஸ் மூலம் மக்களிடம் அபிமானியாக மாறியவர் நடிகை ஓவியா. அவரின் இயல்பான பேச்சு, குறும்பான விளையாட்டு, கலகலவென சிரிப்பு என அவரின் எல்லா விடயங்களும் இளைஞர்களுக்கு பிடித்து போனது.

ஓவியாவுக்கு ஆதரவுகள் குவிந்தது. காதல் தோல்வியால் மன அழுத்தத்திற்கு ஆளானவர் அந்நிகழ்ச்சியில் இருந்து வெளியேறினார். பின் இளைஞர்களிடையே சற்று தொய்வு ஏற்பட்டது.

வெளியே வந்த பின் போட்டோ, வீடியோ என வெளியிட்டு ரசிகர்களை குஷிப்படுத்தினார். படங்களில் அதிகமாக கமிட்டாகியுள்ளாரம்.

இந்நிலையில் பிரபல துணிக்கடை விளம்பரத்தில் ஹன்ஷிகா, தமன்னா ஆகியோர் நடித்திருந்தனர். இந்நிலையில் அதன் புதிய விளம்பரத்தில் ஓவியா நடிக்கயிருக்கிறாராம்.

## சுஜா காரியத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வாள்




பிக்போஸ் வீட்டில் கடைசி 20 நாட்கள் கோல்டன் டிக்கெட்டை வெல்ல அனைவரும் போட்டி போட்டு கொண்டு இருக்கின்றனர்.

காருக்குள்ள யாரு கடைசியா பாரு என்ற டாஸ்கில் மிகவும் கஷ்டப்பட்டு சுஜா மற்றும் சிநேகன் 20 மணி நேரத்திற்கும் மேலாக காருக்குள் இருந்தனர். இந்த டாஸ்கின் சில விதிமுறையை சிநேகன் மீறியதால் சுஜா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

இதனால் சிநேகன் மனம் உடைந்து இந்த வாரம் வெளியேறிவிடுவேன் என்று ஹவுஸ் மெட்ஸ்சிடம் கூறிவந்த நிலையில் அவர் மீண்டும் டாஸ்கில் கலந்து கொள்கிறார்.

இதில் சோளக்காட்டு பொம்மைகளுக்கு மதிப்பெண் தருவது போல் உள்ளது இதில் சிநேகன், சுஜா மற்றும் கணேஷ்க்கு குறைவான மதிப்பெண்களை தருகிறார்.

## இது தான் உண்மையான ஜூலி



பிரபல தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பிக்போஸ் என்ற நிகழ்ச்சி தான் தற்போது அனைவரிடத்திலும் பேசப்படுகிறது. பிக்போஸ் நிகழ்ச்சியின் போட்டியாளர்களில் ஜூலி தான் ரசிகர்களால் மிகவும் வெறுக்கப்பட்டவர் என சொல்லலாம். ஜல்லிக்கட்டு போராட்டத்தின் மூலம் பிரபலமான அவரை முதலில் ரசிகர்கள் ஆதரித்தாலும், ஒரே வாரத்தில் நிலைமை தலை கீழாக மாறிவிட்டது.

இந்த நிலையில், வெளியுலகத்தில் நான் எப்படி நடந்து கொள்கிறேன் என்பது தான் என் உண்மையான கரக்டர். ஷோவில் நான் எப்படி நடந்துகொண்டேன் என்பதல்ல என தெரிவித்து வருகின்றார். நிஜமாவே திருந்தினாலும் இந்த உலகம் காலம் பூராகவும் செய்த தவறுக்காக குறை கூறி கொண்டுதான் இருக்கும். இதற்கு காரணம், நிகழ்ச்சியில் இருக்கும் போது, வெளியில் உள்ள உண்மையான உலகத்தை மறந்து விட்டார். தகுதியை வளர்த்து, திறமையான வாழ்க்கையை ஜெயிச்சுக்காட்டுவதன் மூலம்தான் அவரின் வெற்றிக்கான இலக்கை அடைய முடியும் என்பது பலரின் கருத்து.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2017-17.10.2017

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



அடுத்தவர்களுக்கு உதவுவதில் அலாதி பிரியம் கொண்ட மேஷ இராசி வாசகர்களே!




புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, புதிய திருப்பங்கள் பலவும் காணப்போகிறீர்கள். குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குழப்பங்கள் அகலும். மாதம் முழுவதும் மகிழ்ச்சி கிடைக்கும் விதத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகின்றது. தொடக்க நாளில் சந்திரபலம் நன்றாக உள்ளது. எனவே சுகங்களும் சந்தோசங்களும் பெருகும். ஆரோக்கியத் தொல்லை அகலும், ஆதாயம் அதிகரிக்கும்.

எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றைத் தவிடுபொடியாக்கும் தன்மை குருவின் பார்வைக்கு உண்டு. அதேநேரத்தில் சூரியனும், புதனும் 'பரிவர்த்தனை யோகம்' பெற்றிருக்கிறார்கள். யோகங்களில் சிறப்பானது பரிவர்த்தனை யோகமாகும். 3, 6இற்கு அதிபதியான புதனும், பஞ்சமாதிபதியான சூரியனும் பரிவர்த்தனை பெறுவதால் பிள்ளைகள் வழியில் உத்தியோகம், படிப்பு சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடுகள் செய்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும்.

நேர்முகத் தேர்வு வரை சென்றும் வேலை கிடைக்காமல் வேதனைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது வேலை கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். பணியில் இருப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு தானாக வந்து சேரும். உங்களை விட்டு விலகியிருந்த உடன்பிறப்புகள் இப்பொழுது சமரசமாகி உங்களோடு வந்திணைவர். அதோடு மட்டுமல்லாமல் உங்கள் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருப்பர்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இன்னும் இருக்கின்றது. அது விலகுவதற்கு சில மாதங்கள் உள்ளன. இரண்டரை ஆண்டுகளாக உங்களுக்கு எண்ணற்ற பிரச்சினைகளைக் கொடுத்த சனி பகவான் விலகுவதற்கு இரண்டரை மாதங்கள் முன்னதாகவே நன்மைகளைச் செய்யக் காத்திருப்பார்.

அப்படி நன்மைகள் செய்யக் காத்திருக்கும் சனி பகவானை, திருநள்ளாறு சென்று வழிபட்டு வருவது நல்லது. நளமகாராஜா அரண்மனை; வீடு, வாசல் அனைத்தும் இழந்ததோடு மனைவி மக்களையும் பிரிந்து வாழ்ந்தபோது இந்த ஸ்தலத்திற்கு வந்து தீர்த்தமாடி, இங்குள்ள இறைவனையும், இறைவியையும், சனி பகவானையும் வழிபட்டு இழந்த செல்வங்களை மீண்டும் பெற்றதாகப் புராணங்கள் சொல்கின்றன.

அந்த அடிப்படையில் உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் எதை இழந்திருந்தாலும், அதை மீண்டும் பெறும் யோகம் இந்த ஸ்தல வழிபாட்டிற்கு உண்டு. இங்கு வந்து நள தீர்த்தமாடி நல்லது செய்ய வேண்டி, சனி பகவானை வழிபாடு செய்யுங்கள். மேலும் நவராத்திரி விழாவில் 9 நாட்களும் கலந்து கொண்டு விஜயதசமியன்று பராசக்தியையும் வழிபட்டு வருவது நல்லது.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

உங்கள் இராசிக்கு 3, 6இற்கு அதிபதியான புதன் செப்டெம்பர் 24ஆம் திகதி கன்னி இராசியிலும், ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசியிலும் சஞ்சரிக்கப்போகின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை மறைவிடங்களான 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வலிமை இழப்பது யோகம் தான். வழக்குகள் சாதகமாகும். கடன் சுமை குறைய நீங்கள் எடுத்த புது முயற்சிகள் வெற்றி தரும். துலாம் இராசியில், புதன் சஞ்சரிக்கும் பொழுது தாய்வழி உறவு மேம்படும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

## புது முயற்சிகள் வெற்றி தரும்!

நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!

இதுவரை உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சுக்ர பகவான் ஒக்டோபர் 10ஆம் திகதி கன்னி இராசியில் நீச்சம் பெறப்போகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. பண நெருக்கடி அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் தடுமாற்றம் ஏற்படும். கல்யாண வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். மங்கையர் வழியில் மனக்கலக்கம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

கன்னி இராசியில், செவ்வாயின் சஞ்சாரம்!


ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். 'கன்னிச்செவ்வாய் கடலும் வற்றும்' என்பார்கள். எனவே பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகும். மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். சகோதரர்களிடையே பகை ஏற்படும். சொத்துகளை விற்கும் சூழ்நிலையும் அதனால் மனக்கலக்கமும் உண்டாகும். இம்மாதம் நவராத்திரி நாட்களில் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அஷ்டமத்துச் சனிக்கு பரிகாரமாக அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் பெயர்ச்சியான குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். தடையாக இருந்தவர்கள் விலகுவார்கள். தாய் வழி ஆதரவு கிடைக்கும். கணவன்- மனைவி இடையே அன்பும், அரவணைப்பும் மேலோங்கும். குழந்தைகளின் எண்ணங்களை பூர்த்திசெய்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் பதவியைக் காண்பர். வீடு வாங்கும் யோகம் உண்டு. அகிலாண்டேஸ்வரி வழிபாடு அனைத்து நலன்களையும் உங்களுக்கு வழங்கும்.



நல்ல காரியங்களுக்குப் பிள்ளையார் சுழி போடுவதில் முதன்மையாய் நிற்கும் ரிஷப இராசி வாசகர்களே!




புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்ரன் சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு தனாதிபதி புதனும் விரயாதிபதி செவ்வாயும் இணைந்து சஞ்சரிக்கின்றார்கள். எனவே தனவிரயங்கள் அதிகரிக்குமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். எதை எந்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக நிலம் வாங்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு, அது கைகூடும் விதத்தில் கிரகங்கள் சாதகமாக விளங்குகின்றன. கட்டிய வீட்டைப் பழுது பார்க்க முடியவில்லையே என்றும், கையில் பணம் புழங்கவில்லையே என்றும் கவலைப்பட்டவர்களுக்கு அந்த பணியைத் தொடரும் விதத்தில், பணத்தேவைகள் பூர்த்தியாகப் போகின்றது.

இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும் இம்மாதத்தில், சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

சூரியபலம் 5ஆம் இடத்தில் இருப்பதால் படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சியான விதத்தில் நல்ல தகவல் வந்து சேரப்போகின்றது. அரசு வேலைக்காக முயற்சி செய்திருந்தவர்களுக்கு அதுவும் கைகூடி வரலாம்.

3இல் ராகு இருப்பதால் வழக்குகள் சாதகமாக முடியும். முன்னேற்றப் பாதையில் இருந்த இடையூறுகள் அகலும். சகோதர வர்க்கத்தினரின் சச்சரவுகள் அகலும். உங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களும் முன்வருவர். 6இல் குரு தற்சமயம் வந்திருக்கின்றார். '6இல் குரு ஊரில் பகை' என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கின்றார்கள். ஆனால் உங்களைப் பொறுத்த வரை அந்த மாதிரியான சூழ்நிலை ஏற்படாது. காரணம் உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியாக விளங்குபவர் குருபகவான். 8இற்கு அதிபதி 6இல் வரும் பொழுது விபரீத இராஜயோகம் செயற்படும்.

## திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்!

உங்களுக்கு குரு பகவானின் பெயர்ச்சியால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர், திடீர் என தன லாபம் வந்து கொண்டே இருக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சிகளில் இருந்து விடுபட்டு தனித்து இயங்க முன்வருவீர்கள். குரு பகவானை முறையாக வழிபட்டால் முன்னேற்றப் பாதையை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைக்க இயலும். நவராத்திரி விழா நடைபெறும் இந்த மாதத்தில் 9 நாட்களிலும் அம்பிகையை வழிபடுவதோடு, விஜயதசமியன்று பராசக்தி வழிபாட்டை பரிபூரணமாகச் செய்தால் அதிக பலன் கிடைக்கும்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

செப்டெம்பர் 24ஆம் திகதி கன்னி இராசியிலும், ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசியிலும் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். வலிமை இழந்து புதன் சஞ்சரிக்கப் போவதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யும் சூழ்நிலை உருவாகலாம். திட்டமிட்ட காரியம் திசைமாறிச் செல்லும். பணநெருக்கடிகள் அதிகரிக்கலாம். பிள்ளைகளாலும் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். நல்ல வாய்ப்புகளாக இருந்தாலும் அதை நழுவவிட்டு விடுவீர்கள். இக்காலத்தில் சிறப்புப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!

ஒக்டோபர் 10ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறுகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. எதிர்பாராத திருப்பங்கள் பலவற்றையும் ஏற்படுத்தும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். பொருளாதாரத்தில் நெருக்கடி, குடும்ப உறுப்பினர்களுடன் கருத்து வேறுபாடு போன்றவற்றை எல்லாம் சந்திக்க நேரிடும்.

செவ்வாய் பெயர்ச்சிப் பலன்கள்!

ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். எண்ணியது நிறைவேற ஏற்ற தருணம் இது. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். கட்டடப்பணி தொடரும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்திணைவர். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும்.

குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலை உண்டு. குரு வலிமை இழந்து சஞ்சரிப்பதால் இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும்.

இம்மாதம் அமாவாசையன்று முன்னோர் வழிபாடும், சனிக்கிழமையன்று அனுமன் வழிபாடும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் வளர்ச்சி கூடும் மாதமாகும். அக்கறை காட்டாத செயலில் கூட ஆதாயம் கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள், வீடு கட்டும் யோகம், கட்டடத் திறப்புவிழா நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். தாய் வழி ஆதரவு கிடைக்கும். வாகன யோகம் உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். ஒவ்வொரு வியாழக்கிழமையும் குரு பகவானை வழிபடுவதோடு நவராத்திரி நாட்களில் ஆலயம் சென்று அம்பிகையை வழிபட்டு வருவதன் மூலம் வாழ்வில் வசந்தம் உருவாகும்.

(தொடரும்)




# ஸூஃபியும் கொடிய அரக்கனும்!

(நேற்று முன்தின தொடர்ச்சி)

...அவர் போனதுதான் தாமதம், அரக்கன் படுக்கையிலிருந்து எழுந்தான். பெரிய மரக்கட்டையை எடுத்து ஸூஃபி படுத்திருந்த இடத்தைப் பார்த்து ஏழு விளாசு விளாசினான்.

அதன் பின் படுத்து மறுபடியும் உறங்க ஆரம்பித்தான். சிறிது நேரம் கழித்து ஸூஃபி தனது படுக்கைக்குத் திரும்பினார், அரக்கனைக் கூப்பிட்டார்.

"ஓ அரக்கனே! உனது குகை சௌகரியமாயிருக்கிறது. ஆனால் ஒரு சிறு கொசு மட்டும் என்னை ஏழு தடவை கடித்தது. அதை மட்டும் போக்குவதற்கு நீ ஏதாவது செய்தாக வேண்டும்" என்றார்.

பெரிய மரக்கட்டையால் அசுர பலத்தில் ஏழு தடவை அடி வாங்கிய பின்பும் ஸூஃபி பேசியது அரக்கனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.



காலை புலர்ந்தவுடன், அரக்கன் எருமைத் தோலாலான பையை எடுத்து ஸூஃபியை நோக்கி எறிந்து "கொஞ்சம் தண்ணீர் எடுத்து வா. காலைச்சாப்பாடு செய்யலாம்" என்றான்.

ஸூஃபி அந்தப் பையை எடுக்காமல் உண்மையில் அந்தப் பையை அவரால் தூக்கி நடக்க முடியாது. பக்கத்திலிருந்த நீர்ச் சுனைக்குச் சென்றார். நீர்ச் சுனையிலிருந்து குகைக்கு ஒரு சிறிய கால்வாயைத் தோண்டினார்.

அரக்கன் தாகத்தால் துடித்தான்.

"ஏன் தண்ணீரை சுமந்து வரவில்லை?" என்று அரக்கன் கேட்டான்.

"பொறுமையோடிரு. நண்பனே! வசந்த கால நீரூற்றின் தண்ணீர், உன் குகையின் முகத்துவாரத்துக்கே நிரந்தரமாக வர, கால்வாய் வெட்டியுள்ளேன். அதனால் உனக்கு தண்ணீரைச் சுமந்து வர வேண்டிய அவசியமிருக்காது" என்று பதில் சொன்னார் ஸூஃபி.

தாக விடாயினால் அரக்கனுக்குப் பொறுக்க முடியவில்லை. எருமைப் பையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய் நீரைத் தானே நிரப்பிக் கொண்டான் அரக்கன்.

காலைத் தேநீர் தயாரிக்கப்பட்டவுடன், அதைப் பல பீப்பாய்கள் குடித்து முடித்தான் அரக்கன். தேநீர் குடித்தவுடன் அரக்கனுக்கு புத்தி இலேசான தெளிவுடன் வேலை செய்ய ஆரம்பித்தது.

"நீங்கள் பலவானாக இருந்ததால் ஏற்கனவே அதை எனக்கு நிரூபித்துவிட்டீர்கள் இருந்தும். ஏன் அந்தக் கால்வாயை அங்குலம் அங்குலமாக வெட்டுவதற்கு பதில் வேகமாக வெட்டக்கூடாது?" என்று ஸூஃபியிடம் கேட்டது அரக்கன்.

"உண்மையில் செய்ய வேண்டிய அர்த்தமிக்க வேலைகளுக்கு அதற்குரிய உழைப்பைப் போடாமல் செய்து முடிக்க முடியாது. எல்லாவற்றுக்கும் அதனளவுக்கு ஏற்றவாறு முயற்சிகள் தேவை.

நான் கால்வாயைத் தோண்ட எவ்வளவு அத்தியாவசியமான முயற்சி தேவைப்படுமோ அதை மட்டும் செலவிடுகிறேன். ஆனால், பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட ஜந்துவான நீ, அந்த எருமைத்தோல் பையைத்தான் எப்போதும் பயன்படுத்துவாய் என்பதும் எனக்குத் தெரியும்" என்றார் ஸூஃபி. (முற்றும்)

## 09.2017 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1812 - முதலாம் நெப்போலியன் மொஸ்கோவினுள் நுழைந்ததை அடுத்து ரஷ்ய மக்கள் நள்ளிரவில் நகரை தீயிட்டுக் கொளுத்தினர். மொஸ்கோ நகரம் அடுத்த சில நாட்களில் முற்றாக எரிந்தது.
- 1852 - லண்டனில், மான்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமைக்கப்பட்டது.
- 1887 - மென்பந்தாட்டம் முதன் முதலில் சிக்காகோவில் விளையாடப்பட்டது.
- 1920 - நியூயோர்க் நகரில் ஜே.பி.மோர்கன் கட்டடத்தின் முன்னால் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 38 பேர் கொல்லப்பட்டு 400 பேர் காயமடைந்தனர்.
- 1963 - மலாயா, சிங்கப்பூர் மற்றும் போர்ணியோவின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது.
- 1975 - பப்புவா நியூகினி, அவுஸ்திரேலியாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1978 - ஈரானில் டபாஸ் நகரை 7.5 - 7.9 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 25,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1982 - லெபனானில் பாலஸ்தீன அகதி முகாங்களான சப்ரா, ஷட்டிலா ஆகியவற்றில் லெபனானிய இராணுவத் துணைப்படையினரால் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1987 - ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியால் நகரில் கைச்சாத்திடப்பட்டது.
- 2000 - இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் உலங்குவானூர்தி விபத்தில் கொல்லப்பட்டார்.
- 2002 - விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆரம்பமாயின.
- 2007 - தாய்லாந்தில் 128 பேரை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று வீழ்ந்ததில் 89 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1859 - யுவான் ஷிக்காய், சீனக் குடியரசின் அரசுத்தலைவர் . (இ. 1916)
- 1893 - ஆல்பர்ட் செண்ட்-ஜியார்ஜி. நோபல் பரிசு பெற்ற அங்கேரிய-அமெரிக்க மருத்துவர். (இ. 1986)
- 1916 - எம்.எஸ். சுப்புலட்சுமி, இந்திய கர்நாடக இசைப் பாடகர். (இ. 2004)
- 1923 - லீ குவான் யூ. சிங்கப்பூரின் முதலாவது பிரதமர். (இ. 2015)
- 1933 - வி.சிவசாமி, ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர். (இ. 2014)
- 1933 - ரா. பாலகிருஷ்ணன், தமிழக எழுத்தாளர்.
- 1939 - பி.எம்.எ.சாகுல் ஹமீது, மலேசிய எழுத்தாளர்.
- 1945 - ப.சிதம்பரம், இந்திய அரசியல்வாதி.
- 1950 - மாலன், இந்திய எழுத்தாளர்.
- 1965 - சே.ஜெயானந்தமூர்த்தி, இலங்கை அரசியல்வாதி.
- 1966 - அசங்க குருசிங்க, இலங்கைத் துடுப்பாளர்
- 1974 - யூலியன் காசுட்ரோ, அமெரிக்க அரசியல்வாதி.
- 1976 - மீனா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.

இறப்புகள்

- 655 - முதலாம் மார்ட்டின் (திருத்தந்தை).
- 1394 - எதிர்-திருத்தந்தை ஏழாம் கிளமெண்ட். (பி. 1342)
- 1701 - இங்கிலாந்தின் இரண்டாம் யேம்சு. (பி. 1633)
- 1736 - டானியல் ஃபேரென்ஃகைட், போலந்து-டச்சு இயற்பியலாளர், வெப்பமானியைக் கண்டு பிடித்தவர். (பி. 1686)
- 1925 - அலெக்சாந்தர் ஃபிரீடுமேன், உருசிய இயற்பியலாளர். (பி. 1888)
- 1931 - உமர் முக்தார், லிபியக் கல்வியியலாளர். (பி. 1862)
- 1932 - ரொனால்டு ராஸ், நோபல் பரிசு பெற்ற இந்திய-ஆங்கிலேய மருத்துவர், . (பி. 1857)
- 1998 - கோ.கேசவன், எழுத்தாளர், மார்க்சிய ஆய்வாளர் . (பி. 1946)
- 2000 - எம்.எச்.எம்.அஷ்ரப், இலங்கை அரசியல்வாதி. (பி. 1948)
- 2007 - ராபர்ட். ஜோர்டான், அமெரிக்கப் பொறியியலாளர், எழுத்தாளர் . (பி. 1948)
- 2009 - தென்கச்சி கோ.சுவாமிநாதன், தமிழகப் பேச்சாளர், எழுத்தாளர்.
- 2009 - மீனாட்சி முகர்சி, ஆங்கில இலக்கிய அறிஞர், புதின ஆசிரியர்.
- 2012 - ஜாசு மோகன், இந்திய நடிகர் . (பி. 1928)

சிறப்பு நாள்

- மாவீரர் நாள். (லிபியா)
- மெக்சிக்கோ - விடுதலை நாள். (1810)
- பப்புவா நியூகினி - விடுதலை நாள். (1975)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 100 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 140 | 95 | 110 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 110 | 300 | 150 | 200 | 300 |
| தக்காளி | 200 | 200 | 120 | 200 | 200 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 40 | 80 | 80 | 60 | 80 |
| கோவா | 60 | 100 | 50 | 100 | 80 | [illegible] | [illegible] |
| கரட் | 120 | 250 | 100 | 160 | 130 | 200 | 80 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 40 | 50 | 30 |
| புடோல் | 120 | 120 | 40 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 110 | 70 | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 150 | 260 | 320 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 130 | 300 | 110 | 130 | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 200 | 160 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 50 | 50 | 60 | 80 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 70 | 80 | 120 | 120 | 80 |
| பயற்றங்காய் | 160 | 150 | 120 | 140 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 100 | 150 | 30 | 120 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 40 | 50 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 150 | 70 | 160 | 130 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 10 | 70 | 80 | 50 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 300 | 120 | 180 | 160 | 200 | 160 |
| கத்தரிசம்பள்ள | 80 | 100 | 150 | 80 | [illegible] | 80 | 100 |
| கீரை -1பிடி | 40 | 20 | 30 | 30 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 320 | 300 | 200 | 350 | 300 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 80 | 80 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 300 | 400 | 250 | – | 280 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 220 | 300 | 150 | 160 | – | 200 | – |
| முள்ளங்கி | 80 | 100 | 20 | 80 | 70 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 30 | 20 | 50 | 40 | 50 | 50 |

தாயுமிலி தந்தையுமிலி தமியேனைப்
பேயினிடை நின்றாலும் பிரித்தறியவொண்ணாது.
*- அரிச்சந்திர புராணம்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நெஞ்சை எரித்துவிட்ட அந்தப் பாலகனின் மரணம்

வன்னிப் போரில் தாயையும் தந்தையையும் இழந்த பதின்மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் சில நாட்களுக்கு முன் மயங்கி விழுந்து மரணமானான் என்ற செய்தியை அறிந்ததில் இனம் புரியாத வேதனை வாட்டி வதைக்கிறது.

சீ... என்ன வாழ்க்கை என்று நினைக்குமளவில் அந்தச் சிறுவனின் மரணம் நெஞ்சை எரித்துவிட்டது எனலாம்.

இதை எழுதும் போதும் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொள்கின்றன.

எவ்வளவுதான் ஆதரவும் அரவணைப்பும் இருந்தாலும் தாயும் தந்தையும் இல்லையே என்ற மனவேதனை அந்தப் பாலகனின் ஆன்மாவை வேரறுத்துவிட்டதோ என்று எண்ணுவது தவறன்று.

இத்தகையதொரு பரிதாபம் முல்லைத்தீவில் தமிழ்ச் சிறுவனுக்கு ஏற்பட்டதால்தான் உங்கள் பரிதவிப்பும் வேதனையும் என்று யாரும் நினைத்து விடாதீர்கள்.

மாறாக இதேகதி ஒரு சிங்கள சிறுவனுக்கு அல்லது இஸ்லாமிய பாலகனுக்கு ஏற்பட்டிருந்தாலும் இதேயளவு பரிதாபமும் வேதனையும் எம்மைச் சூழ்ந்திருக்கும் என்பது சத்தியம்.

ஆக, வன்னிப் போரில் தன் பெற்றோரை இழந்த பதின்மூன்று வயதுப் பாலகன் வீழ்ந்து இறந்து போனான் என்ற செய்தி சிங்கள ஊடகங்களில் இடம்பிடித்ததா?.

அது சிங்கள மக்களைச் சென்றடைந்ததா? அல்லது இதேசெய்தி தமிழின விரோதத்துடன் வேறுவிதமாக சிங்கள மக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதா? என்பது நமக்குத் தெரியாது.

ஆனால் நாம் கேட்பதெல்லாம் இலங்கைத் திருநாட்டின் செல்வ மக்களால் வன்னிப் போரில் பெற்றோரை இழந்த 13 வயதுச் சிறுவன் நிலத்தில் வீழ்ந்து இறந்தான் என்ற போது ஏன் அது நடந்தது?. என்று கேட்க வேண்டாமோ?

இந்த அவலத்தை அறிந்த போதேனும் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, இந்த நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்ற சிந்தனை ஏற்பட வேண்டாமோ!

ஓ! பௌத்த தேரர்களே! உலகத்தில் மிகப் பெரிய துன்பம் இளமையில் பெற்றோரை இழத்தல்தான்.

கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது என்றார் ஔவையார். அந்த ஔவையாரின் கூற்றில் பெற்றோரின் இழப்பு உள்ளடங்கியுள்ளது.

ஆம், வள்ளுவரின் சகோதரியாகிய ஔவையை அவரது பெற்றோர்கள் பெற்றவுடனேயே கைவிட்டுச் சென்றதாகவே செய்தி சொல்லப்படுகிறது.

அப்படியானால் பெற்றோரின் இழப்பும் அதனூடனான வறுமையும் ஔவையாரை வாட்ட இளமையில் வறுமை கொடிது என அவர் கூறியிருக்கலாம்.

நம்மைப் பொறுத்தவரை கொடிது கொடிது இளமையில் பெற்றோரை இழத்தல் கொடிது என்பதுதான்.

ஆக, இனியும் இனவாதம் பேசாமல் இந்த மண்ணில் நாட்டில் எல்லோரும் இன்புற்று வாழ வழி செய்வதே பொருத்துடையதாகும்.

# டெங்கு ஒழிப்பு செயற்பாட்டை முன்னெடுக்காத அரச, அரசசார்பற்ற நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கை

## அரச அதிபர் வேதநாயகன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு செயற்பாட்டை உரிய முறையில் மேற்கொள்ளாத அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுககு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் தொற்றுக்கான சூழல் அதிகரித்து வருகின்றமை அனைவரும் அறிந்த விடயம். அதை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மாரி காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்த செயற்பாடு மிகவிரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் டெங்கு ஒழிப்பு வாரம் மீண்டும் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

டெங்கு ஒழிப்பு வாரத்தில் மாத்திரம் சிரமதான பணிகளில் ஈடுபட வேண்டும் என எண்ணாமல் தொடர்ச்சியான செயல்பாடாக அனைவரும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசின் சுற்றுநிருபத்துக்கு அமைய அனைத்து அலுவலகங்ளிலும் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாளை ஒதுக்கி ஒரு மணித்தியாலங்கள் வரை டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியை மேற்கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்குமிடங்களை மிக நுணுக்கமாக பார்வையிட்டு அவ்வாறான இடங்களை அழிக்கவேண்டும்

இச் செயற்பாட்டை அனைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும. இனி மாரிகாலம வரவிருக்கின்ற சிரமதான பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

அரச திணைக்களங்கள் மிக முக்கியமாக இப்பணியை மேற்கொள்ள வேண்டும். அதில் முக்கியமாக மூன்று பிரிவினர் பணிபுரியவுள்ளனர். அதாவது சுகாதார பகுதி, அரச நிர்வாக பகுதி, பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த நடவடிக்கையை உரிய முறையில் கடைப்பிடிக்காத அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் கழிவகற்றல் முறையை நகர சபைகள் பிரதேச சபைகள் சீரான முறையில் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

# நீரின் நிறம் கவிதைத் தொகுப்பு வெளியீடு

க.சட்டநாதன் எழுதிய "நீரின் நிறம்" கவிதைத் தொகுப்பு வெளியீடு நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரியகுளம் முன்பாக உள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் கவிஞர்.இ சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆரம்ப உரையை சி.ரமேஷ் வழங்குவார்.

மதிப்பீட்டுரையை ந.சத்தியபாலன், தி.செல்வமனோகரன் ஆகியோர் வழங்குவர். (இ-7)

# ஆண்டுவிழாவும் வாணிவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் உரும்பிராய் ஸ்ரீசாயி கலைக்கழகத்தின் 23.24 ஆவது ஆண்டு விழாவும் வாணிவிழாவும் நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியின் கற்பக விநாயகர் கலையரங்கில் ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அப்பாத்துரை ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஜயா கலாமணியும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நல்லையா விஜயசுந்தரம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய (அழகியல்) ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் விமலாதேவி நாகேஸ்வரனும் கலந்து கொள்வார்.(இ-7)

# இலங்கை கல்வி நிர்வாக சேவை நாடு பூராகவும் 306 பேர் நியமனம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்-III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத் தேர்வில் தோற்றியவர்களில் 306 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் பொது மற்றும் பாடத்துறை ரீதியாக இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கல்வி நிர்வாக சேவை தரம்- III திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைநதவர்களுக்கு அண்மையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் வடமாகாணத்தில் இரண்டு தமிழர்களுக்கு மட்டுமே இந்நியமனம்கிடைததுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். பிரதேசத்தில் கரணவாய், இலகாமம், நாவலர்மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி, சாமியன் அரசடி, விக்னேஸ்வரா, சம்மந்தர்கடை, கிழவி தோட்டம், காளிகோவிலடி, யாக்கரு, கலிகை, அரசடி, வலிக்கந் தோட்டம், துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரம்மன் கோவிலடி, வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை, தேவரையாளி, மனோகரா, திக்கம், திக்கம் சித்தி விநாயகர், முடக்காடு, மாலு சந்தி, அல்வாய், பாரதிதாசன், முத்துமாரி அம்மன் கோவிலடி, நாவலடி அல்வாய், அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரிமூலை, இன்பருட்டி பிள்ளையார் கோவிலடி, இன்பர்சிட்டி, இலகடி, காந்தியூர், மந்திகை, கப்பூது, குளப்பிட்டி, ஆனைக் கோட்டை சந்தி, யாழ்வீதி மானிப்பாய், ஆறுகால்மடம், கூளாவடி, ஆனைக்கோட்டை VC, நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டைவீதி, சாவற்கட்டு சந்தி, வராகி அம்மன் கோவலடி, காக்கைதீவு, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில்ஒருபகுதி, புகையிரதநிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ்.2ஆம் 3ஆம் 4ஆம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரிய குளத்திலிருந்து முட்டாசுக் கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, அரசடி, சங்கத் தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், நுணாவில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, நொதேர்ண சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலு வலகம், பீப்பிள் லீசிங் அன் பினானஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறை வேற் லிமிற்றெட், மக்கள் வங்கி ஸ்ரானலி வீதி, யாழ் புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறி நதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, றொப் பாஸ் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில அம்பலப் பெருமாள், கோட்டைகட்டி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதிஅந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக் கின்றான். அவனை உணர்ந்த வனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

❖ தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லா வற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

❖ எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூய வராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

❖ உங்களுக்குப் பிடித்ததை கடைபிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

❖ எந்த விடயத்தையும் நன்கு ஆய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மனவுறுதியுடன்

# பிரிமா கிண்ணத்திற்கான மோதலுக்கு வடக்கு, கிழக்கு அணிகளும் தயார்



பாடசாலை மட்ட கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தேசிய மட்டத்திற்கு சிறந்த வீரர்களை உருவாக்கும் எண்ணக் கருவுக்கு அமைய இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பூரண ஒத்துழைப்புடன் 11 ஆவது தடவையாக நடைபெறவுள்ள 15 வயதிற்குட்பட்ட பிரிமா கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி, செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் இருந்து சுமார் 600இற்கும் அதிகமான பாடசாலை வீரர்களின் பங்குபற்றலுடன் 39 மாவட்டமட்ட அணிகளின் பங்குபற்றலுடன் ஆரம்பமாகிய இம்முறைப் போட்டித் தொடரின், மாவட்டமட்டப் போட்டிகள் அனைத்தும் தற்போது நிறைவுக்கு வந்துள்ளன. இந்நிலையில், அப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய வீரர்களை உள்ளடக்கிய 12 அணிகள் மோதும் மாகாண மட்டப் போட்டிகள் அடுத்த வாரம் முதல் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ளன.

இதில் கடந்த முறையைப் போல வடக்கு, கிழக்கு மாகாணங்களைப்பிரிதிநிதித்துவப்படுத்தி அணிகள் களமிறங்கவுள்ளதுடன், வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து இம்முறை 5 அணிகள் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2 பிரிவுகளாக நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டிகளின் இறுதிப்போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டுக்கு அண்மைக்காலமாக பல நட்சத்திர வீரர்களை பெற்றுக்கொடுத்த இத் தொடரின் மூலம் இலங்கை தேசிய அணிக்குள் இடம் பெற்று குசல்மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, நிரோஷன் திக்வெல்ல, பினுர பெர்னாண்டோ ஆகிய வீரர்கள் தற்போது விளையாடி வருவதுடன், இலங்கை 19 வயதிற்குட்பட்ட தேசிய அணியில் சதீர சமரவிக்ரம, அனுக் பெர்ணாந்து மற்றும் பிரியமால் பெரேரா ஆகிய வீரர்களும் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் ஊடகங்களை தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. இதில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பிரிமா நிறுவன அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட ப ல ரு ம கலந்துகொண்டனர்.(க)

# பள்ளிக்குடா அணியை வீழ்த்தி சம்பியனானது வலைப்பாடு ஜெகமீட்பர்



பூநகரி லீக்கின் அனுமதியோடு அன்புபுரம் அன்பு ஐக்கியம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் பள்ளிக்குடா அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வலைப்பாடு ஜெகமீட்பர்அணியினர்.

அண்மையில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் ஏதும் போட முடியாமல் போனது.

இரு அணியும் பலம் வாய்ந்த அணி ஆகையால் போட்டி விறுவிறுப்பாக இடம் பெற்றது..

இறுதியாக சமநிலை தவிர்ப்பு மூலம் 5-4 என்ற கோல் கணக்கில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்றுள்ளது.

சிறந்த கோல் காப்பாளராக வலைப்பாடு ஜெகமீட்பர் அணியின் மதுசன் தெரிவானார். (க)

# யாழின் கில்லாடி யார்? யூனியன் வி.கழகம் வெற்றி



அரியாலை சரஸ்வதி சன சமூகநிலையம் நடத்தும் யாழின் கில்லாடியார்? உதைபந்தாட்ட தொடரின் கடந்த 14.09.2017 அன்று நடைபெற்ற போட்டியில் யூனியன் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டியில் யூனியன் விளையாட்டுக்கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.யூனியன் விளையாட்டு கழகம் சார்பாக தனுஜன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)



# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் பல்கலைக்கழக அணி முன்னிலையில்



ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (1.1.2017) இல் இருந்து 31.7.2017 வரை நடைபெற்ற 91 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ். பல் கலைக்கழகம் 13 போட்டிகளில் பங்கு பற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 83. 64 புள்ளிகளை பெற்று 1 ஆம் இடத்திலும் சென்றலைட்ஸ் அணி 12 போட்டிகளில் பங்கு பற்றி 9 போட்டிகளில் வெற்றி பெற்று 80.68 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் யாழ். ஜொனியன்ஸ் அணி 12 போட்டிகளில் பங்கு பற்றி 9போட்டிகளில் வெற்றி பெற்று80.45 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஏனைய கழகங்களின் நிலை பின் வருமாறு.

திருநெல்வேலி. சி.சி. 79.08 கே.சி.சி.சி. 61.98 ஸ்ரான்லி 52.18 ஜொலிஸ்ரார் 49.89 ஓல்ட் கோல்ஸ் 49.34 ஹாட் லி யைற்ஸ் 38.88, யாழ் . சென்றல் 36.22, அரியாலை சென்றல் 35.67, மானிப் பாய் பரீஸ் 33.05, கிறாஸ் கொப்பர்ஸ் 31.60, யூனியன்ஸ் 25.54, திருநெல்வேலி YMHA 24.38, விங்ஸ் 22.66, ஸ்கந்தா ஸ்ரார் 21.70, பற்றீசியன்ஸ் 21.40, டிறிபேக்ஸ்ரார் 18.20, மூளாய் விக்ரோறி 15.99 நியூஸ்ரார் 15.79 சிறி காமாட்சி 15.30 றெயின்போ 11.70 டிறைற்றோன் 1.68 கடந்த வருடம் 2016 சென்றலைட்ஸ் அணி 24 போட்டிகளில் பங்கு பற்றி 18 போட்டிகளில் வெற்றி பெற்று 161.74 புள்ளிகளை பெற்று 1 ஆம் இடத்திலும் கே.சி.சி.சி. அணி 23 போட்டிகளில் பங்கு பற்றி 17 போட்டிகளில் வெற்றி பெற்று 140.34 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் யாழ். ஜொனிய ன்ஸ் அணி 21 போட்டிகளில் பங்கு பற்றி 15 போட்டிகளில் வெற்றி பெற்று 116.29 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஜெகன் ஹெற்றிக் கோல் ஞானமுருகன் வெற்றி



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் யாழின் கில்லாடியார்? உதைபந்தாட்டத் தொடரின் 14.09.2017 அன்று நடைபெற்ற போட்டியில் யாழ். முத்தமிழ் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது.

இப் போட்டியில் ஜெகனின் ஹெற்றிக் கோலின் உதவியுடன் 5-2 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்று 2 ஆம் சுற்றுக்கு தெரிவானது ஞானமுருகன் அணி.

ஞானமுருகன் அணி சார்பாக ஜெகன் 3. கோலினையும் வகி, தரன் தலா ஒவ்வொரு கோலினைப் போட்டனர்.

போட்டியில் ஆட்ட நாயகனாக ஜெகன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

## மீண்டும் ஒரு போர்...

வையாகவும் ஏற்பாடு செய்திருந்த நீர்க்காகப் போர்ப் பயிற்சிகளின் இறுதி ஒத்திகை நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி கடற்பரப்பில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்த இராணுவத்தின் போர் வியூகங்கள் மற்றும் அனுபவங்களை உள்நாட்டு, வெளிநாட்டு படையினருக்கு கற்றுக் கொடுக்கும் நோக்கத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் கடந்த 2010ஆம் ஆண்டு நீர்க்காகப் போர்ப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் நடைபெற்றுவருகின்றது.

இதற்கமைய எட்டாவது தடவையான இம்முறை நடைபெற்ற நீர்க்காகப் போர்ப் பயிற்சிகள் மேஜர் ஜெனரல் அநுர ஜயசேகர தலைமையில் நடைபெற்றன.

இந்தப் போர்ப் பயிற்சிகளில் சீனா, துருக்கி, ஓமான், இந்தேனேஷியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, சூடான், மலேசியா உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த படையினரும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 302 அதிகாரிகளும், 2442 இராணுவ சிப்பாய்களும் பங்குபற்றியிருந்தனர்.

இந்த நிலையில் இந்தப் பயிற்சிகளின் இறுதிநாள் ஊடகங்களுக்கு முன்பாக இராணுவத் தளபதி கருத்து வெளியிட்டார்.

நாங்கள் 30 வருடமாக போர் செய்து வெற்றிபெற்ற இராணுவப்படை. அந்த இராணுவத்தில் காணப்பட வேண்டிய திறமைகள் மற்றும் பல விடயங்களை நினைவுப்படுத்தல் மற்றும் படையில் இணைந்துள்ள புதியவர்களுக்கு அந்த அனுபவத்தைக் கற்றுக்கொடுப்பதற்காகவும் இந்த பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இராணுவம், விமானப் படை, கடற்படைகளிலுள்ள மூவாயிரம் படையினர் இதில் ஈடுபட்டனர். ஒருமாதகாலத்திற்கு இது இடம்பெறும். நேற்றைய தினம் அதில் ஒரு பகுதியே இடம்பெற்றது. இதனூடாக எமது படையினர் எவ்வளவு தயாராக இருக்கின்றார்கள் என்பது புலப்பட்டிருக்கும். இதன்படி எமது படையினர் நாட்டிற்கு ஏற்படுகின்ற எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளவும், அதற்கான பயிற்சிகளைப் பெற்றும் உள்ளனர். அதனால் எம்மீது நம்பிக்கை வையுங்கள். மூன்று படைகளும் இணைந்து இந்நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்படாத வகையில் பயிற்சி பெற்றும் முகங்கொடுக்கும் ஆற்றலுடையதுமாக இருக்கின்றன. அதுவே எமது பலம். வெளிநாட்டுப் படைகளும் இந்த பயிற்சியில் கலந்துகொண்டன. எமது போர் முறை உள்ளிட்டவைகளை அவர்கள் எவ்வகையில் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதை இதனூடாக புரிந்துகொள்ள முடிகிறது என்றார். (மு-11)

## நிலத்திலும் புலத்திலும்...

கொண்டு திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். முன்னதாக காலை 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வுகளில்,

திலீபனின் பாடல் இசைக்க விடப்பட்டு மாணவர்கள் ஒவ்வொருவராக அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதே போன்று நல்லூரில் இடித்து அழிக்கப்பட்டுள்ள நினைவு தூபியிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியினர் ஆகியோரது ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் முன்னாள் போராளிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதே போன்று முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் புலம்பெயர் தேசங்களான இந்தியா, ஐரோப்பிய நாடுகளிலும் நினைவு நிகழ்வுகள் எழுச்சியுடன் ஆரம்பமாகியுள்ளன. இதேவேளை யாழ்.பல்கலையில் நேற்றைய தினம் ஆரம்பமாகிய நினைவு தினம் எதிர்வரும் 26ஆம் திகதிவரை ஒவ்வொரு நாளும் காலை எட்டு மணிமுதல் பத்து மணிவரையிலான இரண்டு மணித்தியாலங்கள் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும் என மாணவர் ஒன்றிய தலைவர் அறிவித்துள்ளார்.

திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு ஆரம்பக்கால உறுப்பினரும் முக்கிய உறுப்பினராகவும் இருந்தவராவார். இவர் யாழ்ப்பாணம், ஊரெழு எனும் ஊரைச் சேர்ந்தவர். இவரின் மறைவின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் லெப்டினன்ட் கேணல் திலீபன் எனும் நிலை வழங்கப்பட்டது. இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் சொட்டு நீரும் அருந்தா உண்ணா விரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையால் உறுதியுடன் அவ் உண்ணா விரதத்தில் உயிர்துறந்தவர். இவரை இந்திய அரசு இறக்க விட்டது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு இது ஒரு முக்கிய காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

1987 செப்டெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதத்தை ஆரம்பித்தார். 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன்ட் கேணலாக, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் மரணம் எய்தினார்.

**ஐந்து அம்சக் கோரிக்கை வருமாறு,**

1.மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2.சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3.அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

4.ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5.தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்களை திலீபன முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

# இலங்கைக்கு சுற்றுலா வந்த பிரித்தானிய ஊடகவியலாளர்

## முதலை தாக்குதலால் உயிரிழப்பு





(மட்டக்களப்பு)

இலங்கைக்கு சுற்றுலா வந்த பிரித்தானிய ஊடகவியலாளர் ஒருவர் முதலையின் தாக்குதல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு அருகம்பே பகுதியில உள்ள ஏரி ஒன்றில் கைகளை கழுவிக் கொண்டிருந்த வேளை, முதலை ஒன்றை அவரை தாக்கியுள்ளது. பிரித்தானிய பைனான்சியல் டைம்ஸ் ஊடவியலாளர் Paul McClean என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரின் வயது 24 ஆகும்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பட்டதாரியான Paul McClean கழிப்பறை ஒன்றை தேடி சென்று கொண்டிருக்கும் போதே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் McClean இலங்கைக்கு வந்துள்ளார். நண்பர்கள் குழுவினருடன் அருகில் உள்ள ஹோட்டலில் தங்கியுள்ளார்.

McClean நண்பர்களுடன் வெளியில் சென்றுள்ளதுடன், கழிப்பறை ஒன்றை கண்டுபிடிப்பதற்கு அவர் அலைந்து திரிந்துள்ளார். இந்த நிலையில் அவர் முதலையினால் தாக்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

அருகம்பே பகுதிக்கு அருகில் நேற்று மாலை 3.15 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நபர் ஒருவர் திடீரென இழுத்து செல்லப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அவரை தேடும் பணிகளை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்து முன்னெடுத்த போதிலும் அவர்களால் அடுத்த நாள் வரை கண்டுபிடிக்க முடியாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த நாள் ஆழமான சேற்று பகுதியில் இருந்தே அவரது உடல் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பைனான்சியல் டைம்ஸ் ஊடக நிறுவனத்தில் இணைவதற்கு முன்னர் அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் 2015ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொழியில் முதல் வகுப்பு பட்டம் பெற்ற ஒருவராகும்.

அவர் சமீபத்தில் ப்ரெக்ஸிட் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய செய்திகளை பதிவு செய்துள்ள நிலையில் லண்டனுக்கு திரும்புவதற்கு முன்னர் பிரஸ்ஸல்ஸில் நாட்டில் இரண்டு மாதங்கள் வாழ்ந்து வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

செம்பெயின் தொழில் பற்றிய அவரது சமீபத்திய கட்டுரை கடந்த செவ்வாயன்று வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (மு-11)

# வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு திங்களன்று இரண்டாம் கட்ட நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட நிவாரணம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்படி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

எமது மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த வரட்சி நிலை காரணமாக வரட்சி கூடிய பகுதிகளில் நீர் விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வந்தன. தற்போதும் அப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மழை போதியதாக இல்லை. அத்துடன் வளர்ச்சிக்கான நிவாரணங்களும் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

எமது மாவட்டத்தில் ஏற்பட்ட வரட்சியால் 34 ஆயிரம் குடும்பங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 419 குடும்பங்களுக்கு தொடர்ந்தும் நீர் விநியோகம் மேற்கொண்டு வருகிறோம்.

அத்துடன் வரட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்ட விவசாய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மாதம் முதலாம் கட்ட நிவாரணங்கள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட நிவாரணங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. 18 ஆயிரத்து 906 குடும்பங்கள் இந்த வரட்சி நிவாரணத்தை பெறுகின்றனர்.

இந்த நிவாரணங்களை பொதுமக்கள் குறித்த விலையில் பெறுவதற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுடனும் சதொச நிறுவனத்துடனும் கலந்துரையாடல் மேற்கொண்டிருந்தோம். இரண்டிலும் சதொச நிறுவனத்தில் பொருட்களின் விலை குறைவாக உள்ள காரணத்தினால் குறித்த பொருட்களை பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கி அதன் ஊடாக மக்களுக்கு குறைந்த விலையிலும் கூடிய அளவு பொருட்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நீர் விநியோகம் மற்றும் நிவாரணம் சம்பந்தமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்படுகின்றன என மேலும் தெரிவித்துள்ளார். (மு-9)

## நாட்டின் பிரச்சினை...

னால் முடியாது என்பது கடந்த காலங்களில் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு விடயமாகும்.

நாட்டின் வருமானம் மக்களிடையே பகிரப்படுவதில் பாரிய இடைவெளி ஒன்று காணப்படுவதாக ஜேவிபியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

சொத்துடைய ஒரு தரப்பு நாட்டின் வருமானத்தில் 53 சதவீதத்தை அனுபவிக்கின்ற அதேவேளை, 20 சதவீத எளிய மக்கள், 4.4 சதவீத தேசிய வருமானத்தையே தமக்காக பெறுகின்றனர்.

நாட்டின் 5 பிரதான பிரச்சினைகள் உள்ளன.

அதிக கடன், வருமானம் சரியான முறையில் பகிரப்படாமை ஏற்றுமதி வீழ்ச்சி தேசிய வருவாய் வீழ்ச்சி, உற்பத்தி வீழ்ச்சி என்பனவே அவை.

எனவே நாட்டின் தேசிய பொருளாதார திட்டம் ஒன்றை நோக்கிய புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (மு-11)

## தவறான மரு...

ச்சான் கல்லாம்பத்தை பகுதியைச் சேர்ந்த சிவகாந்தன் பிரஸ்னி எனும் 4 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காய்ச்சலுக்கு கொடுக்கப்பட வேண்டிய மருந்துக்கு பதிலாக தவறுதலாக இடுப்பு கடுப்புக்கு பூசுகின்ற மருந்தை அருந்துவதற்கு சிறுமியின் பெற்றோர் வழங்கியதையடுத்து சிறுமியின் உடலில் நச்சுத்தன்மை பாய்ந்துள்ளது.

இதனையடுத்து மூதூர் தள வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிறுமி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-11)

## ஐ.நாவில் உரை...

ஐ.நா பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத்தொடர், தற்போது நடந்து வருகிறது. இதில், எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம், 23 ஆம் திகதி வரை உலகத் தலைவர்கள் உரையாற்றும் அமர்வு இடம்பெறவுள்ளது. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை, எதிர்வரும் 19ஆம் திகதி மாலை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர், இன்று கொழும்பில் இருந்து அமெரிக்கா புறப்படவுள்ளனர்.

ஐ. நா பொதுச்சபையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ள மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின் போது, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று, ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் தர்மசிறி பண்டார எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.(மு-11)

## பொருத்து வீட்டு...

த்து 100 வீடுகளின் கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வட கிழக்கில் மேலும் ஐம்பதாயிரம் கல் வீடு பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. விரைவில் பயனாளிகளுடைய விண்ணப்பங்களை பெறுவதற்கான சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கல்வீடு இல்லாத காரணத்தினால் பொருத்து வீடு விண்ணப்பித்தோம் என எண்ணி பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் கல்வீடு தேவையெனில் மாற்றி விண்ணப்பிக்க முடியும். பொருத்து வீடு தான் வேண்டுமெனில் பொருத்து வீட்டையும் கொடுக்க முடியும். மக்களின் விருப்பம் என்னவோ அதன படி செய்ய முடியும்.

எனவே கல் வீட்டு திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு இடம்பெறும் பொழுது மக்கள் தமது விருப்பங்களை தெரிவித்தால் அதை நடைமுறைப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## பரு.- பொன்னா...

வருவதற்கான பொன்னாலை - பருத்தித்துறை வீதியை விடுவிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வீதியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்ததை அடுத்து மிக விரைவில் குறித்த வீதி திறக்கப்படவுள்ளது. எப்போது திறக்கப்படும் என அறிவிப்பதற்கு இராணுவத் தளபதியுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)


விற்பனைக்கு

பேக்கரி ஓட்டோ விற்பனைக்கு
NP AAB XXXX (TVS வகை)
077 773 3931
(C-9659)


## மகிந்த அணியி...

ற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள பலர் அரசாங்கத்துடன் இணைவதற்கான திரைமறைவிலான பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டி - வத்தேகம நகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல விசேட விருந்தினராக கலந்துகொண்டார். இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது அரசாங்கம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. நல்லாட்சியிலிருந்து 10, 12 அமைச்சர்கள் விலகப் போவதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இப்போது அது குறைந்தே வருகின்றது. அவ்வாறு செல்வதாக சொல்பவர்களில் எவரும் அரசை விட்டு வெளியேறமாட்டார்கள் என்பதை அச்சமின்றி கூறுகின்றேன்.

எமது அரசாங்கம் மிகவும் பலமாக முன்னோக்கி நகரும். வெளியே செல்வோருக்குப் பதிலாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள பலர் அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்கவும் தயாராகி வருகின்றனர். இதற்கான பேச்சுக்கள் திரைமறைவில் இடம்பெறுகின்றன. கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரும் எவ்வாறாயினும் புதிய அமைச்சர்கள் உருவாக்கப்படுவதில்லை. 19 ஆவது திருத்தத்திற்கு அமைய அமைச்சரவை மேலும் அதிகரிக்கப்படமாட்டாது என்றார்.

இதேவேளை இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, எதிர்வரும் 21ஆம் திகதி புதிய அரசியலமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வெளிப்பரங்கமாகவே விவாதங்களையும் நடத்தவிருப்பதாக கூறினார்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக பௌத்த சாசனத்தை அழிக்கப்போவதாக சிலர் கூறுகின்றனர். நாங்கள் பௌத்தர்கள் என்ற வகையில் அதனை ஒருபோதும் செய்யமாட்டோம். பௌத்த சாசனத்திற்கு உரிய இடத்தை அப்படியே நாங்கள் பாதுகாப்போம். இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதிகாரப் பகிர்வின் ஊடாகவே ஆட்சி முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே இந்த மாதம் 21ஆம் திகதி புதிய அரசியலமைப்பு தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். முழு உலகத்திற்கும் கேட்கின்ற வகையில் நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு குறித்து பேசவிருக்கின்றோம்.

நாங்கள் எதனை எதிர்க்கின்றோம், எதனை ஏற்கின்றோம் என்பதை பிரசித்தமாகவே கூறமுடியும். சிலர் உள்ளே ஒன்றையும், வெளியே ஒன்றையும் கூறுகின்றனர். ஆனால் இம்முறை அப்படி செய்யமுடியாது. ஒவ்வொரு பிரிவுகளாக நாங்கள் பேசவுள்ளோம். அப்போதுதான் இதனை ஆதரிப்பவர்கள் யார், அதனை அழிப்பவர்கள் யார் என்பதையும் அறியலாம் என்று கூறினார். (மு-11)

## மீண்டும் அழைக்...

ளது.

மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

சில கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தநிலையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(மு-11)

## தமிழ் மக்களுக்...

திரிபால சிறிசேன வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பார் என சதுரிக்கா சிறிசேன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி பல தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு அந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

ஊடகவியலாளர்கள் சிலரை சந்தித்த சதுரிக்கா சிறிசேன ஊடகவியலாளர்களுக்கு எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் வடக்கில் யுத்தத்தால் நிறைய பெண்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். உங்கள் தந்தை 2015ஆம் ஆண்டு முழு நாட்டிற்கும் ஜனாதிபதியானார், பெண் செயற்பாட்டாளர் என்ற வகையில். உங்கள் தந்தை அந்த பெண்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பார் என நம்புகின்றீர்களா? என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கையில் அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். சதுரிக்கா சிறிசேன, அவர் அந்த மக்களுக்கு நியாயத்தை வழங்குவார் என நான் நினைக்கின்றேன். எனது தந்தை யாழ். மாவட்டத்திற்கே விஜயம் மேற்கொள்கின்றார். அந்த மக்களை சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றார். அவர்கள் இழப்புகள், பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வினை வழங்குவார் என்பது எனது நம்பிக்கை. போதைப் பொருள் தொடர்பில் பேசுகின்றார். அது தொடர்பில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுக்கின்றார். ஆகவே தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம்கள் என இனம், நிறம் பாராது அவர் பணியாற்றுவார் என்பது எனது நம்பிக்கை என அவர் மேலும் தெரிவித்தார். (மு-11)


உயர்தரத்தின் பின்னர்
உங்கள் திறமைகளை வளர்ப்பதற்கு சர்வதேச தரம் வாய்ந்த டிப்ளோமா பாடநெறிகள்
IT மற்றும் ஆங்கிலத்திற்கு | இலங்கையின் பிரபல்யம் பெற்ற இரட்டை டிப்ளோமா பாடநெறிகள்
DUAL DIPLOMA
Diploma in Information Technology (DiTEC INTERNATIONAL) காலம் : 4 மாதங்கள்
Diploma in English (DiE) காலம் : 4 மாதங்கள்
புரட்டாதி 18 வரையிலான பதிவுகளுக்கு இலவச ESOFT T-Shirt வழங்கப்படும்!
ஏனைய டிப்ளோமா பாடநெறிகள்
Diploma in Software Engineering (DiSE)
Diploma in Web Engineering (DiWE)
Diploma in Graphics Designing (DiGD)
Diploma in Hardware & Networking (DiHN)
Diploma in Business Management (DiBM) காலம் : 4 மாதங்கள்
Diploma in Computerized Accounting (DiCA) காலம் : 5 மாதங்கள்
Diploma in Hospitality Managemnet (DiHM)
Diploma in Auto CAD



Assured By PEARSON
தரச் சான்றளிக்கப்பட்டுள்ளது
கட்டணக்கழிவு 25%* | 50%*
பாடநெறியின் இறுதியில் பிரித்தானியச் (UK) சான்றிதழ் வழங்கப்படும்
புதிய பிரிவுகள்
வாரஇறுதிநாள் வகுப்புக்கள் 17.09.2017 காலை 9.00 மணி (ஞாயிற்றுக்கிழமை)
வாரநாள் வகுப்புக்கள் 18.09.2017 காலை 9.00 மணி (திங்கட்கிழமை)
(சி-9653)
பதிவுகளுக்கு : உங்களது பெயர், முகவரி ஆகியவற்றை 077 55 888 95 தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel. : 021 222 4142 Hotline : 077 309 9 308
இலங்கையின் மிகப் பெரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு 021 7 572 572



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org
(334)



021 222 8093 61, அச்செழு வீதி, யாழ்ப்பாணம்



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK - 550/=
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS - 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5600
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா | திருகோணமலை
(C-9644)



உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK - 550/=Kg
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப்பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தகுதி : 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் 0768226241
(C-9623)



Northern Technical Institute
YMCA Building, 107 2/1 Kandy Rd., Jaffna.
2nd Batch பயிற்சிநெறிகள் காலம். Sept - Nov
நேரம் 8.30am - 12.30pm திங்கள், வெள்ளி
■ நுண்திறனும் தொழில் வழிகாட்டியும்
■ Business English both 2 months
■ ICT equivalent to NVQ Level 3
இரண்டு நெறிகளுக்கும் கட்டணம் ரூபாய் 4000/=.
3-ம் நெறிக்கு 3 months கட்டணம் ரூபாய் 6000/=.
புலமைப்பரிசில் 50%, 100% உண்டு. நேரடித் தேர்வுக்கு வியாழன் 21.09.2017 9.00am வரவும்.
இயக்குநர் NTI : 0776505580
(339)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.